தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

" போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் ! "

ஆண்டு சந்தா ரூ. 6

ஆறுமாதச் சந்தா ரூ. 3

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை 23—7—55 சனிக்கிழமை | இதழ் 6

கல்லக்குடி மா காவியம்

இது 'மா காவியம்' எனப் பெயரியதற்குக் காரணம், காவியத்தின் அளவல்ல; காவியத்துக்கான கருவின் பெருமைதான் ! காவியம, அளவில் குறுங்காவியமே !

கண்ணதாசன்

1

திட்டங்கூறு படலம்

நெஞ்சுநிமிர் காளையர்முன் னேற்றமனை நேயர்
அஞ்சுவதெ னுஞ்சிறுசொல் அஞ்சவருவீரர்
வெஞ்சமரெ னில்மனது வேழமெனப் பாயும்
விஞ்சையர்த மிழ்மறவர் மேவுபுல மொன்றில்

ஐந்தடியி லேஇரண்டு அங்குலம்கு றைந்த
பைந்தமிழன் எங்குள்குலம் பாடிவரும் தோழன்
நைந்ததிரு நாடுவளம் நாடமனம் நாடும்
மைந்தன்கரு ணாநிதிம னம்மகிழ்ந்து சொல்வன்:

" முன்னவர் வடித்தபெயர்-மூதறிஞர் நெஞ்சில்
மின்னிடுகல் லக்குடியை மீண்டுமிவண் காண
துன்னலர் இணைத்தபெயர் தூள்வடிவமாக
என்னருமை அண்ணன்பணி இட்டனன் எனக்கே !"

இங்கிதுசொல் கேட்டுமனம் ஏறுநிலை காண
பொங்கிஉடல் மீதுணர்வு போர்வடிவம் பூண
அங்குவளர் தங்கநிகர் அன்புநிறை தோழர்
பங்குபெற முந்துவதில் பாசறைஅ மைத்தார் !

2

தீர்மானப் படலம்

தென்றலரின் தோள்தழுவிச் சிந்துபயில் அன்னம்
மன்றினில் மணித்தவிசு வண்ணமமை செந்நெல்
கன்றுபசு ஏருழவர் கார்நடன மாட
நன்றுவளர் இன்பபுரி லால்குடிஎ னும் ஊர் !

சித்திரமி ழைத்த நகைத் திரர்பலர் அங்கே
முத்துமொழி பேசிமன மொத்துமகிழ் வெய்தி
கத்துகடல் சத்தநிகர் கையொலி எழுப்பி
மத்தக குணத்தொடுதீர் மானமிது கொண்டார் !

3

போர்முழங்கு படலம்

ஊர் உறங்கும் வேளையிலும் உள்ள முறங்காதான்
யார் மயங்குபோதினிலும் தான் மயங்கலில்லான்
சீர்விளங்கும் வீரர்புவிப் பேர்விளங்கவந்தான்
வீரன்கரு ணாநிதிஎவ் வூரிலுமெழுந்தான் !

(வேறு)

" தாதகி வேம்பெனத் தார்புனை வீரர்கள் தனிநாடே !
வேதியர் காலடி வீழ்ந்து வளங்கெடு [1]விதிவீடே !
காதக வடதிசைத் தீயர்கள் சூழ்ந்திடு கடையானாய் !
சாதலு றும்மெனத் தளர்வுமிகுத்துயிர் வாழ்வோமோ !

இன்று பிறந்ததும் வாழ்வதும் உண்மைஎ னும்போதே
என்று மடிந்திடுவோமெனும் செய்தி அறிந்தோமா ?
தின்றுதுயின்று திரிந்து நரைத்துடல் சாயாமல்
இன்று மடிந்திட சூளுரைகொண்டனம்; ஏற்பாயே !

வந்தவர் வாழ்ந்திட சொந்தம்மயங்கிட, வந்தோரே
இந்தநி லத்திடைத் தம்பெயர்சூட்டி மகிழ்ந்தாரே !
நொந்த மனத்தொடு நோயுடலோடுயிர் வாழ்கின்றோம்
இந்தநிலைக்கு இறந்துமறைதலை ஏற்போமே !

தோழர்களே ! தமிழ்த்தூயர்களே ! ஒருசொற் கேளீர் !
ஆழியலைநிகர் தானைகள் கண்டரசுள்ளோரும்
வேழமிதன்பலம் மீறிநடந்திட மாட்டாமல்
சூழுகல்லக்குடித் தூயதமிழ்ப்பெயர்சூட்டாரோ !"

சிங்கமுழங்குதல் போற்கருணாநிதித்தென்னுடன்
அங்குமுழங்கினன் இவ்வணமே ! மொழிகேட்டோரும்
பொங்கரவென்ன நிறைந்துமகிழ்ந்திதுசொல்கின்றார்;
" எங்களுயிர்உடல் விழினும் வாழியஎம்நாடே !"

4

போர்முதனாட்காட்சிப் படலம்

(வேறு)

" தம்பி ! வா !" எனும்வார்த்தை சதுராடிநிற்கும்
தமக்குள்ளே உறவென்று அச்சொல்முழக்கும்
கொம்பாடும் பொலிகாளைக் குணமேசிறக்கும்
[2]கோட்டாலை தீண்டாநல் மகிழ்வேபிறக்கும் !
அன்பால்சி லர்தோள்சி லர்கைசுமக்கும்
ஆதாரம்ஒன்றில் மற்றொன்றும் மணக்கும்
என்போடு என்பாகிச் சதையோடு சதையாய்
எல்லோரும் ஓர்தாய்ப் பிறப்பென்றிருக்கும் !

[3]நாளோலை கண்டற்று மணமக்கள்நெஞ்சம்
நாழிக்குள்ளே பாதி யுகம் காணல்போலே
தாள்மூடித் தாள்தூக்கி-தனியானமங்கை
தடந்தோளன் வரவுக்கு நடைபோடல்போலே
[4]ஆளானத்திற்பட்ட மதயானை என்றும்
அடிதூக்கி அடிதூக்கி அசைந்தாடல்போலே
'நாளை'வரும் மட்டும்தாளாத நெஞ்சம்
நாளுக்கும் இரவுக்கும் பகையானதங்கே !

பொறுப்புக்கு உருவான [5]"அம்பில்"நம்தோழன்
புலிக்கண்கள் சிவப்பேறக் குதித்தாடி நின்றான் !
கருப்புக்கு மெருகேற்றும் [6]மணிஎன்னும்நேயன்
கண்மூட விரும்பாமல் கதைபேசவந்தான் !
மறுப்புக்கும் எதிர்ப்புக்கும் வாடாத நெஞ்சன்
வருவாரை வரவேற்று மகிழ்வூட்டிநின்றான் !
சிரிப்புக்கும் உறவுக்கும் வழிவைத்துவிட்டு
சேர்சஞ்ச லத்தான்வி டைபெற்றுக்கொண்டான்.

—(தொடரும்)

1. நிதிவீடு; 2. துன்பம்; 3. மணஓலை; 4. யானைக்கட்டும்தூண்; 5. அம்பில் தர்மலிங்கம்; 6. எம். எஸ். மணி.

"அணுயுகத்திற்குப் பிறகு ஆயுதம் எப்படி மாறும்?"

"கல்லையும் மண்ணையும் வாரியடித்துக் கொள்வார்கள். அதுதான் காட்டுமிராண்டிகள் காலம்."

இவ்வாறு துணிந்து பதிலிறுத்தவர் தான் விஞ்ஞானி ஐன்ஸ்டின் அவரைப் பற்றி இளந்திரையன் தரும் கட்டுரை இது. புதுமை இல்லாது போகாது ;

"அழிவை வென்ற மனிதர்கள்" என்று உலகின் கண் சில மனிதர்களை உலகில் வாழ்வோர் போற்றுகின்ற பான்மையினை நாம் கண்டிருக்கிறோம். "செத்தும் சாகாதவர்" பட்டியலிலே ஒரு சிலர் மட்டும் சேரவும், மற்றையோர் சேர இயலாமைக்குமுள்ள காரணம் யாது? சிலர் தான் உலகிற்கெனத் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக் கொள்கின்றனர்; மற்றையோர் தங்கட்கென்றே வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக் கொள்கின்றனர்; அதனாலேயே சிலர் செத்தும் வாழ்த்துதலுக்குரியராகின்றனர்!

'தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெரியார்'களது பட்டியலிலே டாக்டர் ஆல்பெர்ட் ஐன்ஸ்டினும் சேருகிறார்!

"அறிவியல் வரலாற்றில் அழியாப் புகழ் பெற்ற எண்மருள் ஐன்ஸ்டினும் ஒருவர்" என்று உலக அறிஞர்கள் இவரைப் பாராட்டுகின்றனர். உலகமேதை ஜியார்ஜ் பெர்னார்ட்ஷா, ஐன்ஸ்டினை "உலகை உருவாக்கிய எண்மருள் ஒருவர்" என்று புகழ்ந்துள்ளார். அந்த அளவிற்கு பேரும் புகழும் பெற்று சிறப்புடன் சீரிய பல அரிய அறிவியல் உண்மைகளை உலகிற்கு தந்த உயர் பெரியார் ஆவார் ஐன்ஸ்டின்!

டாக்டர் ஐன்ஸ்டின் கணக்கியலிலும்--இயக்கநூலிலும் (Physics) தன்னிகரற்ற மேதையாக விளங்கினார்! டாக்டர் ஐன்ஸ்டினது கண்டுபிடிப்புகள் "விஞ்ஞானத்தின் அளப்பெரும் தனி வெற்றிப் பயணம்" என்ற புகழைப் பெற வல்லனவயாகும்! அவரது 26-வது ஆண்டில் முப்பது பக்க அளவில் முதன் முதல் "சார்பு நிலைக் கொள்கை"யை வெளியிட்டார்! (Relativity Theory). "உலகில் சில உண்மைகளே தனி உண்மைகள்; பலவும் ஒன்றுபோலக் காணக் கூடியவை; மற்றவை அத்தன்மைத்தனவல்ல; ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறக்கூடியவை; ஆனாலும் அவை ஒவ்வொன்றும் உண்மையே," என்று அக்கொள்கையின் அடிப்படைத் தத்துவத்தை அவர் ஒரு முறை விளக்கினார். இக்கொள்கையை முற்றுமுணர்ந்தவர் உலகில் அறுவரே உளர் எனக் கூறப்படுகிறது. இது இந்நூற்றாண்டில் கண்டுபிடிக்கப் பட்ட மிக உயரிய கொள்கையாகும்! 'சார்புநிலைக் கொள்கை'யை வெளியிட்ட பின்னர்தான் ஐன்ஸ்டினை நாடிப் பேரும் புகழும் வந்தடைந்தன; நோபல் பரிசும், ஏனைய பரிசுகளும் தந்து அவரைச் சிறப்பித்தனர்.

ஐன்ஸ்டின் சாதனைகளில் சிறந்தவை பலவுண்டு. அதில் இவர் 3-D கொள்கையில் ஒரு சிறு மாற்றம் செய்து, அதை 4-D கொள்கையாக உருவாக்கியதுதான். பொருள் என்பது உயரம், நீளம், அகலம் என்னும் மூன்று கனபரிமாணங்களை யுடையது" என்பது 3-D கொள்கை. அதோடு காலம் என்னும் நான்காவது பரிமாணத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஐன்ஸ்டின் கூறி 4-D கொள்கையை உருவாக்கினார்.

'ஒளி நேர்கோட்டில் பயணம் செய்கிறது' என்பது ஒளியைக் கண்ட அடிப்படை உண்மை. ஆனால் ஐன்ஸ்டின் இதிலும் ஒரு மாற்றம் செய்தார். "பொருள்களைக் கவரும் புவிஈர்ப்பு சக்தி, ஒளியையும் கவர்கிறது; எனவே ஒளி நேராக மட்டும் செல்வதில்லை" என்று புதிய கொள்கையை உருவாக்கினார்.

பொருள்--சக்தி இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவை என்பது நீண்ட நாட்களாக இருந்து வரும் கொள்கை. பொருளைச் சக்தியாகவும், சக்தியைப் பொருளாகவும் மாற்றக்கூடும் என்று கணித முறையில் ஆய்ந்து முடிவு கட்டினார். அதற்கு $E = MC^2$ என்ற ஒரு விதியையும் அமைத்தார். [E = சக்தி; M = பொருள்; C = ஒளியின் வேகம் (நொடிக்கு 186,000 மைல்)] இவ்விதியின் உண்மை, அண்மையில் அணுவைத் துளைத்து சக்தியை வெளியிட்டபோது நிரூபிக்கப்பட்டது. இந்த உண்மையின் அடிப்படையில் அணுவாராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இவரது இவ்விதியால் அணுசக்தியின் ஆற்றல் உணரப்பட்டது; எனவே இவரை **'அணுயுகத் தந்தை'** என அழைத்தல் தகும்!

இத்துணை அளப்பரும் அறிவியல் உண்மைகளைக் கண்டறிந்த அறிஞர் ஐன்ஸ்டின் செறுக்கு கொண்டிருந்தாரில்லை!

"நான் அறிவியல் துறையில் ஆற்றியிருக்கும் தொண்டு மிகக் குறுகிய அளவினதே! அறிவியல் உண்மை மிக அழமும், விரிவுமுடையது! ஒருவன் தன் வாழ்நாள் முழுதும் அறிவியலுக்கென கழிப்பது என்பது அவனது பெரும் பேறுதும்" என்று ஒரு சமயங் கூறியுள்ளார்.

இவர் அறிவியல் துறையில் மட்டுமன்றி உலகியலிலும் கருத்து செலுத்தினார்! உலக அமைதியைக் காணவேண்டும் என்று உழைத்தார்! சுதந்திரத்திற்கும், எதேச்சாதிகாரத்துக்கு மிடையே போர் நிகழ்வதை அவர் விரும்பவில்லை; மாறாக அது குறித்து மனம் வருந்தினார். நாஜிகளின் கொடுங்கோன்மை தாங்காது அவர் அமெரிக்கா அடைந்தபொழுது, "அரசியல் சுதந்திரமும், மதசுதந்திரமும், சமத்துவமும் எந்த நாட்டில் நிலவுகிறதோ அந்த நாட்டில் தான் நான் நிலைபெற்று வாழ்வேன்," என்று கூறினார்.

சிறந்த விஞ்ஞானியாகவும், பகுத்தறிவுவாதியாகவும் இருந்து உலகிற்கு பல அரிய பெரிய விஞ்ஞான உண்மைகளை நல்கி சீரும் சிறப்பும் பெற்ற அந்த அறிவுலக மேதை சென்ற ஏப்ரல் திங்கள் 18-ம் நாள் இயற்கை எய்திவிட்டார். அவரது மறைவு அறிவியல் உலகின் மகத்தான நஷ்டமாகும்! அவர் சாகுமுன் என்னென்ன உயர் உண்மைகளை நெஞ்சத்தில் தாங்கிய வண்ணம் இருந்தாரோ! அவை நமக்குப் பயன்படாவண்ணம் போய்விட்டது! அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்ப அவருக்கிணையான விஞ்ஞானி எவருளர் என்று அறிவுலகம் ஏங்குகிறது!

வாழ்க ஐன்ஸ்டின் புகழ்!

'கனவே! நீ கனவு காண்பாய்!'

['அம்பிகாபதி கோவை'யில் சில வரிகளை மூலமாக வைத்து 'எழில்' என்பார் சுவைமிக்க இந்தச் சிறிய கட்டுரையை தந்துள்ளார்]

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' யெனும் நிலைதெரிந்த தலைவன் பொருளீட்ட வரச்சென்றான். திறமை சான்ற உழைப்பால் அவன் விரும்பிய செல்வம் சேர்த்தான். ஓய்வில்லா உழைப்பு உடலுக்கு ஊறு விளைவித்தது-காய்ச்சல் கண்டான்! காதல் வாழ்வில் களிப்புக் கொஞ்ச-பொருள் சேர்த்து வர வந்த அவனை நோய் சூழ்ந்தது. விரும்பிய செல்வம் பெற்றான் - உடன் ஊர் செல்ல முடியவில்லை, காய்ச்சலால் அவன் உடலும் உள்ளமும் சுட்டன. எண்ணங்கள் இறந்த கால நிகழ்ச்சிகளில் தூடேற்றிச் சுவை காண முயன்று-சூட்டை தாங்கமுடியாமல் தவித்தன!

தலைவியை எண்ணி எண்ணித் தவித்தான். தான் வருங்கால் பிரிவுத்துயரால் துன்புற்ற காதலியை நினைந்து நினைந்துஉருகினான், 'உள்ளங்கவர்ந்த கன்னி எப்படியிருக்கிறாளோ? உள்ளக்கொதிப்பால் உடல் மெலிந்து, நலிந்து கிடக்கிறாளோ?' என்று ஏங்கினான்.

அவன் நெஞ்சத்தில் நினைவுகள் உயிர்பெற்று கனவாக நடித்தன. காய்ச்சலால் துயில்கொண்டிருந்த தலைவனின் இதயம் கனவு கண்டு பிதற்றியது. கனவிலே நினைக்கவொண்ணா இன்பங்கள் தெரிவதுண்டு. வறுமைக்கடலில் வாழ்பவனும் கனவு அலைகளின்மூலம் இன்ப நிலலைப் பிடிக்க முயல்வது இயல்பு, காதலியைப் பிரிந்து தவிக்கும் காதலன் கனவில் இன்பங் காண்பது பொய்யன்று.

இதோ இங்கொரு தலைவன் கனவு காண்கிறான், காணுங்கள்! கனவு வெறும் கானல்தோற்றம் என்பதை உணர்ந்ததும்-வாய்பிதற்றுகிறான்! அதை ஒரு கவிஞன் எவ்வளவு அழகாக உருவகம் செய்துள்ளான் பாருங்கள்,

வழவழப்பான மூங்கிலையொத்த தோள்களையும், மணக்கும் மலர்களாலான மாலையை யணிந்த தலைவியின் மார்பையும் தழுவி இன்பங் காண்பதாகக் கனவு காண்கிறான், காய்ச்சல் காதலன், கனவில் வந்து இன்பங்கொடுத்த காதலியைக் கண்விழித்துக் காண்கிறான், காதலியையுங் காணோம், களிப்பூட்டிய காரிகையையுங் காணோம். இரவின் பார்வைதான் இருண்டு தெரிந்தது. அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. 'யாரை நோவது? தன்னை நோவதா? தனக்கு இன்பம் கொடுத்த தலைவியை நோவதா? தனக்கின்பம் தருவதாக மோடி காட்டிய கனவை நோவதா?' அவனும் திகைத்தான்-திணறினான்! திணறல் ஒரு துணிவை உண்டாக்கிற்று அவனுக்கு!

"என் போன்று தலைவியைப் பிரிந்து தனிமையிலிருப்போர்க்கு எதிர்ப்படும் கங்குலில் தோன்றுங்கனவே! நீயும் ஒரு காலத்தில் இதேப்போன்று கனவு காண்பாய்!" என்று பிதற்றுகிறான். 'கனவே! நீ ஒரு காலத்தில் கனவு காண்குவை!' என்று பிதற்றும் அவன் எத்துணைக் காதல் வெறியோடு இருந்திருப்பானென்று எண்ணிப்பாருங்கள். எண்ண எண்ண இன்பம் பயக்கும்,

இப்படிப்பட்ட ஒரு தலைவனை நமக்குக் காட்டுவது அம்பிகாபதி கோவை, அக்கோவை படிக்கப் படிக்க இன்பஞ் சுரப்பது. மேற்கண்ட கருத்தின் பின்னணியாகவுள்ள பாடல் இதோ!

" வன்வேய் பொருதடந் தோள்வடந் தோய்முலை வல்லிபுல்ல
நனவே எனஉன்னி நாட்டம் திறந்துள ஞானமிலார்
எனவே தனிநின் றிரங்கவெங் கானத் திகலுங் கங்குற்
கனவே உனக்கும் கனவெய்து மால்ஒரு காலத்திலே."

—அம்பிகாபதி கோவை.

எண்ணம்

கண்ணதாசன்

பெரியார் அறிக்கை, திராவிட கழக மத்தியக் கமிட்டியின் தீர்மானம், திராவிடத்தில் ஆங்காங்கே எழும்பியுள்ள பேச்சொலி இவை அத்தனையும் ஒன்று சேர்ந்து, வழக்கமாக யார் யார் உள்ளத்திலே கேள்விக்குறி முளைக்குமோ, அவர்களின் உள்ளங்களிலெல்லாம் கேள்விக்குறிகளை தூவியிருக்கிறது என்பதை நாமறிவோம். இந்தக் கிளர்ச்சியை, அடக்குமுறையைப் பிரயோகித்து ஒடுக்குவதா, அரசியல் நளினத்தைக் கையாண்டு நசுக்குவதா என்ற ஆருடங்களும் கடந்த இரண்டு நாட்களாக நடந்துவராமலிராது. யார், யார், எந்த நேரத்தில், எங்கே சந்திக்கவேண்டுமோ அங்கே சந்தித்திருப்பார்கள். எதிரியின் திட்டம் பெரிதென்பார் ஒருவர், இல்லை; அப்படியொன்றும் பிரமாதமில்லை என்பார் மற்றொருவர்; தவறு, தவறு; வரப்போகிற 'ஆகஸ்டு' வந்துபோன 'ஆகஸ்டு'க்களைப் போல இருக்காது; எதிரியின் படையை பலமுள்ளதாகத்தான் மதிக்கவேண்டும் என்று போர்த்தத்துவம் கூறுவார் மற்றொருவர். சந்திப்பு உரையாடல் இந்த முறையில்தான் இருந்திருக்குமேயன்றி, தென்னாட்டில் இப்படி ஒரு கிளர்ச்சி - திராவிட இயக்கத்தை எட்டிக்காய் என்று வெறுத்துப் பேசியோர்கூட 'போனால் என்ன சிறைக்கு' என்ற நிலைக்கு வந்துவிடக் கூடிய கிளர்ச்சி ஏன் அரும்பு விட்டது என்று எண்ணிப் பார்த்திருக்கமாட்டார்கள். மற்ற நாட்டு அரசு பீடங்களில் உள்ளவர்களைப்போல, இங்கே இருக்கிற பூசாரிகளுக்கு அதிகார போதை என்றும் சொல்லிவிடமுடியாது; போதை கொண்டவன் பொழுதுவிடிந்தவுடனாவது உண்மையை உணர்ந்துகொள்ளுகிற காரணத்தால்! பகைகொள்ளா பச்சைக்குழந்தையை வெறுக்கிறவனை-புற்றுப்பாம்பையும் சற்று மெய்மறக்கச் செய்யும் இசையமுதை ஏளனம் செய்வோனை சமுதாயம் என்ன பெயரிட்டழைக்கிறதோ அந்தப் பெயர் கொண்டு அழைக்கப்படவேண்டிய இந்த சர்க்கார் தனது வாழ்நாளில் தானாக ஏற்படுத்திக்கொண்ட தொல்லைகளிலெல்லாம், அவைகளுக்குக் காரணம் கண்டு, ஆவன செய்துகொண்டதில்லை. 'அடக்கி விட்டார்கள் புரட்சியை' என்று அகிலத்தார் புகழக் கேட்டு திருப்திகொள்ளத்தான் இவர்கள் பள்ளிகொண்டு பின்துள்ளி எழுகிறார்களோ என்னவோ! ஆனால், இந்த கிளர்ச்சி, ஆட்சியாளருக்குப் புகழ்தரக்கூடிய கிளர்ச்சி என்று சொல்லிவிடுவதற்கில்லை. அவ்வாறு அவர்கள் எதிர்பார்ப்பதும் அவசர-அரசியல் சபலமாகும்.

'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல' என்பதே தமிழ்நாட்டு முதுமொழிதான். அந்த முதுமொழியை பெற்றெடுத்த தமிழ்மொழியை அழித்திட, அந்த முதுமொழியையே தங்களுக்கு வழிகாட்டியாக்கிக்கொள்ள டில்லி பீடத்தார் முனைந்திருப்பதை தமிழ்நாட்டார் எத்தனை நாளைக்குத்தான் தவிர்த்துவிடும்படி சொல்லிப் பார்ப்பது! எடுத்துச் சொன்னபோதெல்லாம், 'அப்படியொன்றுமில்லை; அதிருப்திகொள்ள வேண்டாம்' என்று சொன்னார்களே தவிர, உச்சியிலே இருப்போர்க்கு ஆணித்தரமாகச் சொல்லவில்லை 'தென்னாடு இந்தியை அடியோடு வெறுக்கிறது' என்பதாக. இரட்டைப் படகில் கால்வைத்த அந்த அசட்டைத்தனம் பெற்றெடுத்த மூகவுதான் பெரியாரின் அறிக்கை-அவரின் திட்டம்.

கிளர்ச்சியிலே, யார், யார் கலந்துகொள்கிறார்கள், கிளர்ச்சியின் திட்டம், யார் யாரை, எந்த அளவுக்கு வசப்படுத்தியிருக்கிறது என்பதை எடைபோட்டு பார்த்துவிடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. இந்த உண்மையை அறிந்துகொள்ள அத்துணை ஆராய்ச்சி தேவைப்படுவதற்குக் காரணமே, திராவிடர் இயக்கம் ஒன்றுதான் தென்னாட்டில் உருப்படியான கட்சியாக இருப்பதுதான். அத்தகைய இயக்கத்தின் தாய்க்கழகம் திட்டத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறது. நாட்டைப் பிடிக்க முதலில் அந்த நாட்டின் மொழியைக் கொல்லும் போர்முறையை பகைவர் படை தயாரித்து வருகின்ற நேரமிது. இந்த நேரத்தில் விழிநிகர் மொழி காத்து, வீழ்ச்சியுற்ற தாயகத்தை எழுச்சிபெறச் செய்ய இளைஞர்படை துடித்து நின்றாலும் அது ஆச்சரியப்படக் கூடியதல்லதான். இன்னும் பத்து இரவு! பத்துப் பகல்! அவ்வளவுதான்!

திருவள்ளுவர் திருநாள்!

தமிழர் "அன்று" வாழ்ந்தனர்--இன்று தாழ்ந்தனர். மறுபடியும் வாழ்வுண்டோ--என்று ஐயுறும் அளவிற்கு அடிமையில் மோகம் கொண்டு மடிந்துகொண்டுள்ளனர்.

எனினும் காரிருள் சூழும் இரவிலே--வழியறியாது தத்தளிப்பவனுக்கு--விடிவெள்ளி காட்சி தருகின்றது. புத்துணர்வும், புது எழுச்சியும் துளிர்க்கின்றது, இந்நாள். அதன் பயனே, தமிழர் தமது வழிகாட்டியை, வாழ்வு வழங்கியோனைக் கண்டுகொண்டு விட்டனர். அவனே, வாழ்வாங்கு வாழும் வழி உணர்த்தும் திருக்குறள் தந்த திருவள்ளுவப் பெருந்தகை. இன்றைய தமிழர் அவனை அறிவர். அவன் புகழ் உணர்வர், அவன் கண்ட நெறியிலே நிற்பர் என்று கூறவோ வழியில்லை. இன்றும் பெரும்பாலோர், நீடு துயில் நீங்கா நிலையிலேயே ஆழ்ந்துள்ளனர். அந்த நீடு துயில் நீங்கப் பாடிவரும் பகலென்ன ஒளிரும் வள்ளுவரை, நாடறியச் செய்யவே வள்ளுவர் திருநாள் இன்றியமையாததாகிறது. எனவேதான், இரண்டு ஆண்டுகட்கு முன்பு, புரசை, குறள் நெறிக்கழகம், ஜூலை இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமெனக் கொண்டாடத் தீர்மானித்தது. அடுத்து, 11-7-54 அன்று, அண்ணாமலை நகரில், உயர்திரு. நாவலர் ச. சோ. பாரதியார் தலைமையில் கூடிய, சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிலும், ஜூலை இறுதி வாரத்தில் (ஞாயிறு அல்லாத) ஒரு நாளைத் திருவள்ளுவர் திருநாளெனக் குறித்து, சென்னை அரசியலார் பொது விடுமுறை அளிக்க வேண்டுமெனவும், அந்த வாரத்தையே--வள்ளுவர் வாரமாகக் கொண்டாடவேண்டுமென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் பற்பல இடங்களிலும் இதனைத் தழுவி விழாக் கொண்டாடியுள்ளனர். மேலும், 26-12-54ல் மதுரையில் டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குறள் மாநாட்டிலும், 16, 17-4-55 நாட்களில், சேலத்தில் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த "திருவள்ளுவர் நினைவு நாள்" மாநாட்டிலும், 14, 15-5-55 நாட்களில் பெங்களூரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டிலும், ஜூலை இறுதி வாரத்தையே உறுதிப்படுத்தி, ஜூலை 25ந் தேதி அரசியலார் விடுமுறை வழங்கவேண்டுமெனக் கேட்டுத் தீர்மானங்கள் நிறைவேறி உள்ளன. மாநாடுகளில் கலந்துகொண்ட அறிஞர்கள் பலரும் இதனை ஆதரித்துள்ளனர்.

எனவே ஜூலை 25--வள்ளுவர் நாள், ஜூலை இறுதி வாரம்--வள்ளுவர் வாரம் என்பது--கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், பொது இடங்களிலும் கொண்டாடுவதற்கு ஏற்ப அமைந்தது என்பதாலேயே--தமிழறிஞர், ஆசிரியர் அனைவராலும் ஒருமுகமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே--இதனையே எல்லோரும் ஏற்று, ஒன்றுபட்டு கடமையாற்ற வேண்டுகின்றோம்!

ஆண் பெண், ஆசிரியர், மாணவர், இளையர், முதியர், உழவர், ஊர் ஆள்வோர், முதலிய வெவ்வேறு நிலையினரும் வகையினரும்--பட்டி தொட்டி, நாடு நகரம், தெரு திண்ணை, பள்ளி, கல்லூரி, படிப்பகம், மன்றம், வீடு வெளி, அலுவலகம், ஆடுமிடம், எங்கும் வள்ளுவர் விழா எடுக்கவேண்டும்! தமிழர் வாழும், வதியுமிடமெங்கும், தமிழ் ஒலிக்கும் இடமெல்லாம், இன உணர்வு பொங்கத் தமிழர் திருநாளாம் பொங்கலெனத் திருவள்ளுவர் திருநாள் திகழவேண்டும்!

அறம் தழைக்க, பொருள் செழிக்க, இன்பம் கொழிக்க, குறள் நெறி நிலைக்க வள்ளுவர் விழா எடுப்பீர் என வேண்டிக்கொள்கிறோம்! நன்றி மறவாதீர்! நல்லதை செய்யத் தவறாதீர்! வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி.

இங்ஙனம்,

க. அன்பழகன்,

(தலைவர், குறள்நெறிக் கழகம்,
புரசை.)

ராஜதண்டனை

9-7-55ம் தேதிய இதழில் ராஜதண்டனை--காட்சி 9-ல் 'இள தமிழ்ப் புலவரே' என்றிருப்பது 'இன்தமிழ்ப் புரவலரே' என்றிருக்கவேண்டும். திருத்திக் கொள்க.

கண்ணதாசன் கலந்துகொள்ளும் சென்னை நிகழ்ச்சிகள்

ஜூலை 22 வண்ணாரப்பேட்டை
,, 23 சேப்பாக்கம்
,, 24 இராயபுரம் (சென்னை)
,, 30 சைதாப்பேட்டை
,, 31 மவுண்ட்ரோடு

(தி. மு. க.)

இந்தக் கூட்டங்களில் தோழர் வளையாபதி-முத்துகிருஷ்ணனும் கலந்துகொள்வார்.

வெண்பாப் போட்டி 13.

★

ஈற்றடி:

நெஞ்சிலே யிட்ட நெருப்பு

முடிவு தேதி 6-8-55.

வாழ்வது எப்படியோ?

(5)

இன்ஷூரன்ஸ், வாணிப வகைகளில் மிகவும் புதுமாதிரியானதும், சமுதாயத்திற்குப் பயனுள்ளதுமாகும். எதிர்பாராத விபத்துக்களைப் பற்றியும், அவைகள் ஏற்படுத்தும் ஏராளமான நஷ்டங்களைப் பற்றியும் எப்பொழுதுமே மனிதனுக்கு ஒரு பயம் உண்டு. இந்தப் பயத்தை அடிப்படையாகக்கொண்டுதான் இன்ஷூரன்ஸ் வியாபாரம் நடைபெறுகிறது.

"திடீரென்று நான் செத்துப் போய்விட்டால், எனது மனைவி, மக்கள்......ஐயோ!"

"எனது இந்தப் பெரிய கிடங்கு திடீரென்று தீப்பிடித்துக்கொண்டு கட்டிடமும் சரக்குகளும் வெந்து சாம்பலாகி......பிறகு?"

"எனது கைமுதல் அனைத்தையும் இட்டுவாங்கி அனுப்பும் சரக்குகள் வாங்குபவர் கைக்குச் சென்றடையுமுன், கடலில் கப்பலோடு மூழ்கிவிட்டால்-என்கதி?"

"இருபதினாயிரம் ரூபாய்க்கு வாங்கியுள்ள எனது புதிய கார், விபத்தில் சிக்கி சுக்கு நூறாகிவிட்டால் என் பணம்?"

என இப்படி திடீரென்று ஏற்படும் பலவகை விபத்துகள் ஒரு மனிதனை, ஒரு குடும்பத்தை எத்தனை சிறப்போடு வாழ்ந்திருப்பினும், ஒரு நொடியில் திக்கற்றவர்களாக, வாழ்விழந்தவர்களாக மாற்றிவிடுகின்றன. எனவே, இவ்விபத்துகள் நேர்ந்தாலும் உள்ள நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று உறுதியளிக்க ஒரு நிலையம் முன் வருகிறது.

"குடும்பத்தின் தலைவனே! ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் நூறு வீதம் இருபது ஆண்டுகளுக்கு செலுத்துகிறேன் என்று உறுதி கூறு. இரண்டே ஆண்டுகளில் நீ திடீரென்று மரணமடைய நேரிட்டால், நாங்கள் உனது குடும்பத்திற்கு ரூபாய் இரண்டாயிரம் தந்துவிடுகிறோம். நீ கட்டிய பணம் ரூபாய் இருநூறுதான். ஆனால், உனது குடும்பம் பெறுவதோ ரூபாய் இரண்டாயிரம்; எனவே, உனது திடீர் மரணத்தால் உனது குடும்பம் திக்கற்ற குடும்பம் ஆகிவிடாது. அதாவது, விபத்தின் பொருளாதார நஷ்டத்தை நாங்கள் ஈடு செய்துவிடுகிறோம்.

கிடங்கில் சரக்கடுக்கி வைத்துக் கொண்டு, சதா விபத்தைப் பற்றியே அஞ்சிக் கிடக்கும் வணிகனே! கிடங்கு சரக்கு, ஆகியவற்றின் மொத்த மதிப்பில் நூறில் ஒரு பங்கு மதிப்பை கட்டணமாகச் செலுத்திவிடு. விபத்து நேர்ந்து அத்தனை சரக்குகளும் அழிந்து போனாலும் மொத்த மதிப்பையும், விபத்து நேராமல் சரக்கை விற்றிருந்தால் கிடைத்திருக்கக்கூடிய லாபத்தையும் நாங்கள் உனக்குத் தருகிறோம்.

கப்பலில் சரக்கை ஏற்றிவிட்டு, கன்னத்தில் கைவைத்துக்கொண்டிருக்கும் வணிகரே! கவலைப்படாதீர்கள். கப்பல் கவிழ்ந்தாலும் சரக்குகளுக்குரிய தொகையை உங்களுக்கும், கப்பலின் விலையை கப்பல்காரருக்கும் தந்துவிடுகிறோம். மிகக் குறைந்த அளவு கட்டணத்தைச் செலுத்திவிட்டு கவலையை விடுவீர்.

காருடையாரே! கவலைப்படாதீர்; விபத்தில் கார் சுக்கு நூறாகப் போயிவிடினும் ஆண்டுக்குச் சில நூறு ரூபாய்களைக் கட்டணமாகச் செலுத்துங்கள்; அந்த ஆண்டிற்குள் எத்தனைமுறை விபத்து நேரிட்டாலும், ஒவ்வொரு முறையும் காரைச் செப்பனிட எவ்வளவு ஆயிரங்கள் செலவானாலும், நாங்கள் தருகிறோம். காரே செப்பனிட முடியாத அளவுக்கு உடைந்து போயினும் காரின் கிரயம் பதினைந்தாயிரம் ஆயினும் இருபதாயிரம் ஆயினும் தொகை முழுதும் நாங்கள் தருகிறோம்." என இன்ஷூரன்ஸ் நிலையங்கள் வாக்களிக்கின்றன பலருக்கும் வாக்களித்துக் கட்டணங்களை வசூல் செய்கின்றன. சிலர் மட்டுமே விபத்துக்குள்ளாவதால் அவர்களுக்கு வாக்களித்த தொகையைத் தருவதில் நஷ்டமேற்படுவதில்லை. ஆயுள் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் ஒருவர் தனது ஆயுளை ரூ 2000 க்கு 20 வருஷ காலத்திற்கு இன்ஷூர் செய்து கொண்டால், வருஷமொன்றுக்கு ரூ. 100 வீதம் செலுத்த நேரிடுகிறது. திடீர் மரணம், அந்த 20 ஆண்டு காலவரையரைக்குள் ஏற்படாவிடில் அவர் கட்டிய ரூ 2000 மிகமிகக் குறைந்த வட்டியோடு அவருக்குத் திருப்பித் தரப்படுகிறது. ஆனால், அவர் ஆண்டுதோறும் செலுத்திவந்த பணத்தை இன்ஷூரன்ஸ் கம்பெனி வேறு வியாபாரத்திலோ, சர்க்கார் கடன் பத்திரங்களிலோ ஈடுபடுத்தி அதிக வட்டியை ஈட்டும். பெரும் நகரங்களில் மிகப் பெரிய கட்டிடங்களைக் கட்டி வாடகைகளின் மூலமும் நல்ல வருமானத்தைத் தேடிக்கொள்ளும்.

முதல் இன்ஷூரன்ஸ் நிலையம் இங்கிலாந்தில் 1762-ம் ஆண்டு தோன்றியது. இந்தியத் துணைக் கண்டத்தில் 1871-ம் ஆண்டில் தான் இன்ஷூரன்ஸ் நிலையங்கள் தோன்றின. இந்தியத் துணைக் கண்டத்தில் என்றால் வடக்கே பம்பாயில்தான் என்று சொல்லத் தேவையில்லை.

இத்தகைய இன்ஷூரன்ஸ் நிலையங்களில் கோடிக்கணக்கில் மக்களின் பணம் புரளுகின்றது. இந்தப் பணத்தை நிலையத்தின் டைரக்டர்கள் விரும்பிய தொழில் நிலையங்களுக்குக் கடனாகக் கொடுத்துத் தொழிலை அபிவிருத்தி செய்யலாம். பாங்கிகளில் உள்ளதுபோலவே இன்ஷூரன்ஸ் துறையில் வடநாட்டினரின் ஆதிக்கமே தலைதூக்கி நிற்கிறது.

இந்தியக் கம்பெனிகள் 221-ல் ஆந்திரம், சென்னை, ஹைதராபாத், மைசூர், திருவிதாங்கூர், கொச்சி ஆகிய ஐந்து மாநிலங்களிலும் உள்ள கம்பெனிகளின் எண்ணிக்கை 37 ஆகும்.

இவைகளில் தென்னாட்டில் இன்ஷூரன்ஸ் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளில் மிகப் பெரியது யுனைட்டட் இண்டியா கம்பெனியாகும். வடநாட்டில் உள்ள மிகப் பெரிய கம்பெனி ஓரியண்டல் கவர்ன்மெண்ட் செக்யூரிட்டி லைப் அஸ்ஸுரன்ஸ் கம்பெனியாகும். இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடாகும். இரண்டு நிலையங்களுக்கும் இடையேயுள்ள வாணிப அளவைக் கண்டறிய வேண்டுமெனில், அவ்விரண்டு கம்பெனிகளும் வெளியில் தொழில் நிலையங்களுக்கும், தனிப்பட்டோருக்கும், சர்க்காருக்கும் வட்டிக்கு விட்டிருக்கிற தொகையையும், அத்தோடுகூட வாடகைக்குக் கட்டிவிட்டிருக்கும் கட்டிடங்களின் மதிப்பையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

யுனைட்டட் இண்டியா வட்டிக்கு விட்டிருப்பதும் கட்டிடங்களில் போட்டிருப்பதும் 6 கோடியே 83 லட்சத்து 67 ஆயிரத்து 444 ரூபாய்கள்.

வடநாட்டு ஓரியண்டல் கம்பெனி வட்டிக்கு விட்டிருப்பதும், கட்டிடங்களில் போட்டிருப்பதும் 66 கோடியே 46 லட்சத்து 26 ஆயிரத்து 349 ரூபாய்களாகும்!

வடநாட்டில் உள்ள மற்றொரு கம்பெனியான நியூ இண்டியா ஈடுபடுத்தியுள்ள தொகை 21 கோடியே 28 லட்சத்து 75 ஆயிரத்து 552 ரூபாய்கள்.

வடநாட்டவரின் ஆதிக்கத்தில் கல்கத்தாவில் உள்ள இந்துஸ்தான் கோ-ஆப்ரேட்டிவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி வட்டிக்கு விட்டிருப்பதும், கட்டிடங்களில் ஈடுபடுத்தியிருப்பதும் 20 கோடியே 24 லட்சத்து 80 ஆயிரத்து 517 ரூபாய்கள்.

மற்றபடி, இவைதவிர, யுனைட்டட் இண்டியாவின் அளவுக்கு மேலாக தொகைகளை ஈடுபடுத்தியுள்ள வடநாட்டு கம்பெனிகளான, பாம்பே லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி (6, 98, 41, 131), எம்பயர் ஆப் இண்டியா (8, 63, 49, 580), நேஷனல் இன்ஷூரன்ஸ் (7, 14, 01, 684) ஆகியவைகளும் உள்ளன.

தென்னாட்டில் யுனைட்டட் இண்டியாவுக்கு அடுத்ததாக விளங்கும் ஆந்திரா இன்ஷூரன்ஸ் கம்பெனி ஈடுபடுத்தியுள்ள தொகை, 1 கோடியே 88 லட்சத்து 6 ஆயிரத்து 564 ரூபாய்களாகும். மற்ற கம்பெனி

(9-ம் பக்கம் பார்க்க)

மெய்ச்செல்வம் எது? எங்கே அது? என்பதுபற்றி ஆதாரங்களோடு விளக்குகிறார்..............

ஈ.வெ.கி.சம்பத்

நியமிக்கப்படும் பொதுக்குழு உறுப்பினர்கள்

கீழ்க்கண்டவர்கள், பொதுச்செயலாளரால் பொதுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள் :--

தோழர் அ. பொன்னம்பலனார்
,, காஞ்சி-கல்யாணசுந்தரம்
,, ஆர். பாலகுருசாமி (சிதம்பரம்)
,, ஒளியழகன் (குன்னூர்)
,, கே. ஆர். இராமசாமி
,, எம். ஜி. இராமச்சந்திரன்

தலைமைச் செயற்குழு :

கீழ்க்கண்டவர்கள் அடங்கிய தலைமைச் செயற்குழு பொதுச் செயலாளரால் அமைக்கப்படுகிறது :--

துணைப் பொதுச்செயலாளர் :

தோழர் என். வி. நடராசன்

சேயற்குழு உறுப்பினர்கள் :

தோழர் சி. என். அண்ணாதுரை	தோழர் ஜி. பி. சோமசுந்தரம்
,, ஈ. வெ. கி. சம்பத்	,, அம்பில் தருமலிங்கம்
,, மு. கருணாநிதி	,, மதுரை எஸ். முத்து
,, கே. ஏ. மதியழகன்	,, கே. வி. கே. சாமி
,, சி. பி. சிற்றரசு	,, வி. எம். ஜான்
,, ஏ. வி. பி. ஆசைத்தம்பி	,, இரா. சாம்பசிவம்
தோழியர் சத்தியவாணிமுத்து	,, சி. வி. எம். அண்ணாமலை
தோழர் கே. கே. நீலமேகம்	

"அறிவகம்",
சென்னை,
15-7-55.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

"உலகியற்றியான்" யார்? ஆண்டவனா? அரசனா?

கண்ணதாசன்

ஒரு இலக்கியத்தின் முழு வடிவத்தையுமோ, அல்லது அதன் பகுதிகளையோ எடுத்து ஆய்ந்து, புதுப்பொருள் கண்டுபிடிக்கும் ஆசை, இலக்கியம் பயின்ற - பயில விரும்பும் - எல்லோருக்கும் ஏற்படுவது இயற்கை. அப்படி ஆயும்போது, எவ்வளவு எச்சரிக்கையும் நுண்ணறிவும் வேண்டும் என்பதை அவர்களில் சிலர் மறந்துவிடுவதும் உணர்ச்சியின் பாற்பட்ட-இயற்கை. ஏதாவதொரு கருத்து தன் மனதில் பட்ட உடனே எப்படியாவது அதை எடுத்து மக்கள் மத்தியிலே வீசி எறிந்துவிட வேண்டும் என்பது தான் அவர்களின் மூலமுதலான உணர்ச்சியாக இருக்கும். அதனாலேயே அவர்கள் சொல்லுகிற கருத்துக்கள் பலவும் விவாதத்திற்கும் - கேலிக்கும் உரியனவாகி விடுகின்றன. முடிந்த முடிபாக, தனியொரு மனிதனுக்குத் தோன்றும் பல கருத்துக்கள், அதே மனிதன், அதே கருத்தைப் பற்றி வேறொருவரிடம் பேசும்போது தவறாகிவிடுகின்றன. இலக்கியத்தை ஆயப்புறப்படுவோர் இதை மனதில் கொள்வார்களானால் 'தவறு' அச்சுவாகனம் ஏறாது.

எதையும் ஆயும்போது சிலரோடு பேசித்தான் தீரவேண்டுமென்பதல்ல, நான்சொல்வதன் பொருள் பேசாதபோதிலும், பல இலக்கியங்களைக் கொண்டும், தன் கருத்தை எடைபோட வேண்டுமென்பதுதான். அப்படி ஆயும்போதுகூட சிறு தவறுகள் ஏற்படுவதுண்டு. காரணம், எந்த விவகாரத்திற்கும்-இலக்கியத்தில் முடிவான தீர்ப்புக் கிடைப்பதில்லை. சாட்சி பலம்கொண்ட வழக்கு வெல்வதுபோல், ஆதாரம் பல கொண்ட ஆய்வுவெல்லும்- இன்னொருவன் புது ஆதாரம் கொண்டு வரும்போது, அதுவே மறு விசாரணைக்கு வந்து தோல்வியடைந்துவிடும்!

ஆகவே, "இதை நான் இப்படிக் கருதுகிறேன்; இதுதான் சரியாக இருக்கமுடியும்" என்று, யாராவது எதைப் பற்றியாவது விவாதிக்க வரும்போது, எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ அவ்வளவு ஆதாரங்களையும் காட்டிவிடவேண்டும். எதிராக ஆய்பவனுக்கு எந்த ஆதாரமும் கிடைக்காதபடி எடுத்துக் கூறிவிடவேண்டும். அப்படிக் கூறும்போதுதான் "நாம் கூறும் கருத்தே மூல ஆசிரியனின் கருத்தாக இருக்கலாம்" என்று மற்றவர்கள் ஒப்புக்கொள்வார்கள். அது தவறாக இருந்தால்கூட-மூல ஆசிரியன் அதைப் பற்றி முடிவேதும் கூறாததால்-நம் கருத்தே அவன் கருத்தாக ஒட்டிக் கொண்டுவிடும். இதுவரையிலும் பண்டை இலக்கியங்களைப் பற்றியும் அவை கூறும் பொருள் பற்றியும் நாம்கட்டிக்கொண்டிருக்கிற-பெரும்பாலான - முடிவுகளெல்லாம், இப்படிச் சிலபேர் ஆதாரங்களை முழுக்க எடுத்துக்காட்டிச் சொன்னதால் ஏற்பட்ட முடிவுகளே! நிற்க.

வள்ளுவர்செய் திருக்குறட்பாக்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பரிமேலழகர், மணக்குடவர் போன்றோர் கூறியவைதான், சமீபகாலம் வரை, குறளுக்கு முடிந்த முடிபாக இருந்தன. அவர்கள் வெறும் உரையைமட்டும் கூறிவிட்டு, தாங்கள் ஏன் இப்படிப் பொருள் கொண்டோம் என்பது பற்றி அதிகம் கூறாமல் போய்விட்டார்கள். அது அவர்கள் காலத்தில் தேவைப்படாமல் இருந்திருக்கலாம். நேர் எதிர் மாறான கோணங்களில் இரண்டு பேர் ஆய்கின்ற நிலை அந்நாளில் இல்லாமல் இருந்திருக்கலாம். அதனால். பின்னாலே, சமீபகாலத்தில் குறளை ஆயப்புகுந்தவர்களில் சிலர், வள்ளுவன் காலத்திற்கு ஆதாரம் தேடி, காலவரம்பு கட்டி, அதே நேரத்தில் வள்ளுவனுக்கு சமகாலம், முந்தியகாலம் எனச் சில இலக்கியங்களுக்கு வரம்பு கட்டி, "குறட் கருத்துக்கள் முன்னாலேயே இன்னின்னவற்றில் இப்படி இப்படி வந்துள்ளன. ஆகவே, குறட் கருத்து அதையொட்டி எழுந்ததே" எனக் கூறத் தலைப்பட்டார்கள்.

அது இருக்கமுடியாது என எண்ணியவர்களும், அப்படி இருக்கக்கூடாது என்று ஆசைப்பட்டவர்களும்-உண்மையிலேயே அதுதவறு எனத் திடமாக நம்பியோரும், வள்ளுவனின் கால ஆராய்ச்சியில் இறங்கினார்கள். நாவலரையா, டாக்டர் ராசமாணிக்கனார் போன்றோர் இத்துறையில் இறங்கினார்கள். முந்திய துறையில் வையாபுரியார் நின்றார். வையாபுரியார், வள்ளுவன் காலம் கி. பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டு எனவும், 'மனு' முந்தியவன் எனவும், அவன் கருத்தே சில குறள்களின் வடிவம் எனவும் கூறினார். பின்னவர்கள் அது அல்ல என ஆணித்தரமாக மறுத்தார்கள். அளவு கடந்த ஆதரவும் ஆதாரமும் பின்னவர்களுக்கே இருந்தது. ஆகவே, வையாபுரியார் கருத்து, "துணிச்சலானது" என்ற பெயரோடு, அரங்கேறமுடியாமல் தூங்கிவிட்டது. இது, "ஒன்றைத்தழுவி ஒன்று வந்ததா?" என்கிற அளவிலே நடந்த ஆய்வுதான். ஒரே குறளுக்குப் பொருள் வேறு சண்டு, அதற்கு ஆதாரம் தேடித்தந்த ஆய்வல்ல.

அப்படிப்பட்டதொரு ஆய்வுதான் சமீபகாலத்தில் ஆடம்பரமாக நடந்துவருகிறது தனியொருவரும் தங்கள் கருத்தையே முளையடித்து விட முயல்கிறார்கள். அதனால், தவறென்று பெரும்பலர் கருதும் கருத்துக்கள்கூட முளையடிக்கப் பட்டு, பின்னால், பிடுங்கிக்கொண்டு ஓடிவிடுகின்றன.

பண்பையும் பகுத்தறிவையும் கொண்டு, "சொல்பகுத்து"ச் சிலரும், ஆராயவேண்டுமே என்பதற்காக அவசரமாகச் சிலரும், சிலரைத் தடவிக் கொடுப்பதோடு தானும் புகழ் பெறலாம் என்று சிலரும், திருக்குறட்பாவை ஆய்கிறார்கள். இதிலே மூன்றாவது நோக்கத்துக்காகவே, ஒரு குறட்பாவை ஆராயப் புகுந்து, கேலிக்கு ஆளாகிறார் தோழர் சிவஞானம்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்துகெடுக உலகியற்றியான்"

என்பது அவர் எடுத்துக்கொண்ட குறள். இதன் பொருளாக, அன்று முதல் இன்றுவரை எல்லா உரையாசிரியர்களும் - டாக்டர் மு. வ. கவிராச பண்டிதர் உட்பட - கூறும் உரை இதுதான்.

"உலகத்தைப் படைத்தவன், உலகில் சிலர் இரந்தும் உயிர் வாழுமாறு ஏற்படுத்தியிருந்தால், அவன், இரப்பவரைப்போல் எங்கும் அலைந்து கெடுவானாக"

அதாவது, "ஆண்டவன், தன் படைப்பில், சிலர் இரந்து வாழுமாறு படைத்திருந்தால் அவனும் அவ்வாறே இரந்து அலைந்து கெடுக!" என்பது கருத்தென்று அனைவரும் கூறுகிறார்கள். தோழர் சிவஞானம் அந்த ஒருமித்த கருத்தை ஓங்கியடித்து உடைக்க வருகிறார். ஒருமித்த கருத்தாயிருப்பதாலேயே அதை உடைக்கக்கூடாது என்று நான் கூறமாட்டேன். அப்படிப்பட்டதொரு ஒருமித்த கருத்தை உடைக்க வரும்போது "கோணல்தன"மாகக் குதித்து விடக்கூடாது என்பது தான் நான் சொல்வது.

சிவஞானம், "வள்ளுவன் சொன்ன "உலகியற்றியான்" ஆண்டவனல்ல; அரசனே!" என்று இரண்டொரு சட்டை ஆதாரங்களைக்காட்டிச் சாத்துகிறார். அது, பார்ப்பதற்குப் பரிதாபமாயிருப்பதோடு, ஏன் இவர், இப்படி, தெரியாத விஷயங்களில் தலையிட்டு அவதிப்படுகிறார் என்றும் எண்ணச் செய்கிறது. முன்பொருமுறை, "பண்டையத்தமிழ் வழக்கில் தாலி கட்டுதல் உண்டா?" என்ற பிரச்சினையில் தப்பும் தவறுமாகக் கூறிவிட்டு, அவர் வேதனைப் பட்ட கதை நாடறியும். இப்போதும் அதே தவறு செய்கிறார்! அது என்ன, எப்படி சரியா, என்றெல்லாம் ஆராயுமுன், ஆராய்ச்சியாளன் எந்தெந்த வழிகளை வகுத்த-எவ்வெவ்வழிகளில் சென்று - ஆராய முடியும்- ஆராயவேண்டும் என்பதை முதலில் கவனிப்போம்.

மேலைநாட்டார், இலக்கிய ஆராய்ச்சி முறைக்குச் சில விதிகளை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

1. JUDICIAL CRITICISM
—முடிபுமுறை ஆராய்ச்சி- (திறனாய்வு)
2. INDUCTIVE CRITICISM
-விதிமுறைத் திறனாய்வு-
3. HISTORICAL CRITICISM
-வரலாற்றுமுறைத்திறனாய்வு-
4. APPRECIATIVE CRITICISM
-பாராட்டுமுறைத் திறனாய்வு-
5. ANALYTICAL CRITICISM
-பகுத்தல்முறைத் திறனாய்வு-

எனப் பல வழிகளை அவர்கள் வகுத்து, அதன்படி, எந்த இலக்கியத்தை எந்த முறையில் ஆராய வேண்டுமோ அப்படி ஆராய்கிறார்கள். அதனால் எதிலும் கூடுமான வரை சரியான முடிவுக்கு வந்துவிடுகிறார்கள்.

இப்படி, ஆராய்ச்சிக்கு விதிவகுக்கும் முறை தமிழில் இல்லை என்றாலும், ஆய்வோர் பலரும் தங்கள் அளவுக்கு ஒரு விதி வகுத்துக் கொண்டு தான் ஆய்வார்கள். (அது சிறிதும் தெரியாமல் ஆராய்பவர் தோழர் சிவஞானம் ஒருவர்தான்.) நிற்க.

தமிழிலும் நாம் ஒரு கணக்குப் போட்டு விதி கண்டுபிடித்தால் கீழ்க்கண்டவையும் அதில் அடங்கும்.

1. மூல ஆசிரியனின் காலங் கொண்டு ஆய்தல்.
2. மற்ற இலக்கியங்களோடு ஒற்றுமை கண்டு ஆய்தல் அல்லது வேற்றுமை கண்டு ஆய்தல்.
3. சொல்பகுத்து ஆய்தல்.
4. பல பொருள் கொண்ட சொல்லை மூல ஆசிரியன் எந்தெந்த இடங்களில் என்னென்ன பொருளில் கையாண்டுள்ளான் என்று கண்டு ஆய்தல்.
5. சொல்லின், மூலங்கண்டு ஆய்தல்.

சிவஞானம், குழம்பிக்குழப்பும் குறட்பாவினை ஆராய்வதற்கு, மேற்கண்டவற்றில் பின் நான்கு விதிகள் முழுக்கப் பயன்படும். நாம் அந்தப் பாதையில் போனால்தான் தெளிவு காண முடியும். சிவஞானத்தைப்போல் "மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான்" என்று கூறிவிடமுடியாதல்லவா!

முதலில், "உலகியற்றியான்" என்ற பதத்துக்கு சரியான பொருள் என்னவென்று - பகுத்துப்பார்ப்போம். அது 'பகுபதம்' தானே! அதுவும் இரு சொற்றொடர் - அதாவது, உலகு—இயற்றியான் — உலகியற்றியான். (தொடரும்)

திருடனும் பத்திரிகாதிபரும்

அடெசா நகரத்தில் பிரசுரம் செய்யப்படும் ஓர் பத்திரிகையில் ஓர் வேடிக்கையானசெய்தி பிரசுரமாகியிருந்தது. பத்திராதிபருடைய இருப்புப்பெட்டியை உடைத்து அதிலிருந்து கொஞ்சம் பணத்தையும் அத்துடன் இருந்த நாலு கடிதங்களையும் அபகரித்துக்கொண்டுபோன அந்தத் திருடன் தயவுசெய்து பணத்தை எடுத்துக்கொண்டு அக்கடிதங்களை எங்கள் ஆபீசுக்கு அனுப்பிவைத்தால், அனுப்பி வைத்தவர்களுடைய மேல் விலாசத்தைப் பார்த்து அவர்களுக்கு பத்திரிகைகளை அனுப்பி வைப்பது சுலபமாயிருக்கும் என்று பிரசுரப்படுத்தியிருந்தார்கள். அப்பால் இரண்டுநாள் கழித்து பின்வருமாறு பத்திராதிபருக்கு பதில் கிடைத்தது. "கனம் பொருந்திய ஐயாவே! தங்களிஷ்டப்படியே பணத்தை எடுத்துக்கொண்டு தங்கள் கடிதங்களை இப்போது அனுப்பிவிடுகிறேன். தயவுசெய்து எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்; தங்கள் சாமானை எடுத்துக்கொண்டு திரும்பும்போது ஜன்னல் வழியாகக் குதித்து இறங்கிவரவேண்டி இருந்தபடியால் அவசரத்தில் பூட்டுடைக்கும் கருவியையும் இரண்டு சாவிகளையும் என் சாமான்களடங்கிய ஓர் சிறு பையையும் விட்டுவிட்டு வந்துவிட்டேன் தயவுசெய்து நான் மறந்த அந்தச் சாமான்களை ஜூலாஜிகல் தோட்டத்துக்குப் போகும் பிரதான வாசலுக்குக் கொஞ்ச தூரத்தில் இன்று சாயந்தரம் போட்டுவிடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். தங்களுக்கு அதிக மரியாதையுடன் வணக்கம் செய்கிறேன்." என்று கண்டிருந்தது. அதற்குப் பதிலாக பத்திராதிபர் மறுநாள் பத்திரிகையில் "நேரில் தெரிந்துகொள்ளாத எங்கள் நண்பரே, அனுப்பிய நாலு கடிதங்களும் வரப்பெற்றோம். அவைகளை இவ்வளவு ஜாக்ரதையாக அனுப்பி வைத்ததற்காக தங்களுக்கு வந்தனம் சொல்லுகிறோம். தங்கள் சாமான்களை நேற்றுப் போலீஸார் கையில் ஒப்புவித்தபடியால் அவைகளை இப்போது தங்களுக்கு அனுப்பச் சாத்தியப்படவில்லை. அதனால் தாங்கள் சங்கடத்தில் அகப்படாமல் இருப்பீர்களென்று நம்புகிறோம் என்று எழுதப்பட்டிருந்தது.



[செம்பியன் நாட்டார் வந்துகொண்டிருக்கிறார். கூட அரும் பாக்கத்து அருணிலைவிசாகரும் வந்துகொண்டிருக்கிறார்.]

அம்பிகாபதி : வருக, வருக! என்ன இப்படித் திடீரென்று ஆற்றங் கரைக்கு ?

செம் : நீ எதற்காக வந்தாயோ அதற்காகத்தான்.

அம் : நான் அமைதியைத் தேடி வந்தேன்.

அரும் : நாங்களும் ஏறக்குறைய அதைத்தான் தேடிவந்தோம்.

அம் : சரி, எல்லோருமே காரணமில்லாமல்தான் வந்திருக் கிறோம்.

செம் : காரணமில்லாமலில்லை. முக்கியமாக உன்னிடம் ஒன்று சொல்லவேண்டும்.

அம் : என்ன ?

அரும் : உட்கார்ந்து பேசுவோம் வா.

[மூவரும் உட்காருதல்.]

செம் : இலக்கிய கழகத்தைப்பற்றி நீ நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உன் தந்தை கம்பரிடத்திலே பொறாமை கொண்டவர்கள் பலர் அங்கேயிருக்கிறார்கள். அரசவையிலே கம்பனுக்கிருக்கும் செல்வாக்கு தங்களுக்கு ஆபத்தாக முடியுமோ என்று சிலரும், கம்பன்--தமிழிலே என்ன புதுமை செய்துவிட்டான்? கம்பனுக்கு என்ன தெரியும்? என்றெல்லாம் பொறாமையால் வசைபாடும் சிலரும் அங்கே இருக்கிறார்கள்.

அம் : தெரியுமே எனக்கு. ஒட்டக்கூத்தர், வாணியன்தாதன், காட்டங்குடியார் இவர்கள்தானே ?

செம் : ஆம் அவர்கள்தான். ஆனால், நீ நினைப்பதுபோல இவர்கள்தானே என்று சுலபமாகத் தள்ளிவிடமுடியாது. குலோத்துங்கனிடத்திலே கூத்தனுக்கு வேறுவிதமான செல்வாக்கு. அவனது சாகசமும், தந்திரப் பேச்சும் சம்பாதித்துக் கொடுத்த செல்வாக்கது. இன்றுவரை இலக்கியக் கழகத்தில் அந்தச் செல்வாக்கை அவன் பயன் படுத்தவில்லை. பயன்படுத்த ஆரம்பித்தால் வேதனையான விளைவுகள் ஏற்படலாம்.

அம் : எனக்கந்த பயமில்லை. கம்பரிடத்தில்தான் கூத்தனுக் குப் பகை. அம்பிகாபதியிடத்திலல்ல. அம்பிகாபதியை விரோதிக்கிற அளவுக்கு அவன் பைத்தியக்காரனாக இருப் பானென்று நான் கருதவில்லை.

[அரும்பாக்கத்து அருணிலைவிசாகர் அம்பிகாபதி முதுகில் பல மாகத் தட்டி சிரிக்கிறார்.]

செம் : என்னவோ, எந்த வேளையிலும் அந்த மூவரிடத்திலும் நீ எச்சரிக்கையாக இருந்துகொள்வது நல்லது.

அம் : நிச்சயமாக நம்புங்கள். கூத்தன் என்னிடம் வாலாட்ட துளியும் இடம்கொடுக்க மாட்டேன். வாணியன்தாதனை மட்டந்தட்ட வெறும் வார்த்தைகளே போதும். காட்டங் குடியார் பாவம். மாணுக்கன் அம்பிகாபதி குழந்தை மாதிரி. சிரித்துப் பேசும் எல்லோரையுமே நம்புவான்.

அரும் : அடே, அவ்வளவும் தெரிந்துவைத்திருக்கிறாயே.

அம் : இல்லாமல் இலக்கியக் கழகத்தில் வாழ்வதெப்படி ?

செம் : சரி, போகலாம். இதைச் சொல்லத்தான் வந்தோம்.

அம் : நான் இங்கிருப்பது எப்படித் தெரியும் உங்களுக்கு?

செம் : இல்லத்தில் தேடிப்பார்த்து இங்கே வந்தோம்.

[மூவரும் நடக்கிறார்கள்.]

—காட்சி முடிவு—

களம் 12 (2-3)

காட்சி : 12

இடம் : குலோத்துங்கன் அரண்மனை (உட்புறம்)

நேரம் : காலை.

[[1] "தஞ்சையில் பெரிய கோயில் எழுப்பியவனும், தமிழர் வரலாற்றை வீரகாவியமாக ஆக்கிவைத்தவனுமான இராசஇராச சோழன் காலத்திலிருந்து சோழநாட்டிலே ஒரு வழக்கம் ஏற் பட்டிருந்தது. அதாவது வடநாட்டிலிருந்து சைவாச்சாரியார் களை வரவழைத்து அவர்களைத் தங்கள் ராஜகுருக்களாக வைத் துக்கொள்ளுவது. அந்த முறைப்படி குலோத்துங்கனின் ராஜகுருவாய் விளங்கியவர் ஈசுவரசிவன். அவர் லாடதேசத்தி லிருந்து வந்தவர். சாண்டில்ய கோத்திரத்தவரான ஸ்ரீகண்ட சம்புவின் புத்திரர். சித்தாந்தரத்நாகரத்தை இயற்றியவர். அவருக்கு வடமொழியின்மீது அளவற்ற மோகமும், வால்மீக ராமாயணத்தின்மீது அபரிமிதமான பக்தியுமுண்டு. அவருக் கிருந்த ஒரே ஆசை வால்மீகி ராமாயணத்தை தமிழில் பாட வேண்டுமென்பதுதான்."

குலோத்துங்கன், அரண்மனையின் உட்புறத்தில் சிந்தனை யோடு உட்கார்ந்திருக்கிறான். ஈசுவரசிவன் எதிரிலே அமர்ந் திருக்கிறார்.]

ஈசு : சோழமன்னா! இது உன் காலத்தில் செய்யப்படவில்லை யென்றால் வேறு யார் செய்வார்கள்? இராமாயணம் தமிழில் பாடப்படவில்லையென்றால் யாருக்கு நஷ்டம்? தமிழுக்குத்தானே ?

குலோத் : இல்லை குருதேவா. என்ன பழி வந்து நேருமோ என்றஞ்சுகிறேன்.

ஈசு : என்ன பழி வரும்? எப்படி வரும்? என் வரும்? குலோத்துங்கா! சராசரி மனிதனுக்கு வருகிற சஞ்சலம் உனக்கேன் வருகிறது? ஆயிரம் பழி வந்தாலும் உன் அரசதிகாரத்தின் முன்னே என்ன செய்யும்.

குலோத் : சரி; நாளை இந்தக் கருத்தை அரசவைப் புலவர்கள் முன் னிலையில் வைக்கிறேன்.

ஈசு : வைப்பதென்ன! கட்டளையிடு!

குலோத் : யாருக்கு ?

ஈசு : கம்பனுக்கு. அவன் ஒருவன்தான் இதைச் செய்ய முடியும்.

குலோத் : உண்மைதான். ஆனால், கட்டளையிட்டுக் கவிபாடவைக்க நினைப்பது தடியாலடித்து மேகத்தை மழைபொழிய வைப்பதுபோல்! அதுவும் கம்பனுக்குக் கட்டளை. சொல் லாதீர்கள்; சிரிப்பார்கள்.

கண்ணதாசன்

ஈசு : என்னவோ, இராமாயணம் தமிழில் பாடப்படவேண்டும். அது உன் கண்முன்னே அரங்கேறவேண்டும். அவ்வளவு தான். பதில் சொல்லாமல் காரியத்திலிறங்கு.

[1] அரு. இராமநாதன் குறிப்புகள்.

குலோத் : சரி, எதற்கும் நாளை அரசவையில் கலந்துகொள்ளும்படி இலக்கியக் கழகத்திற்கு அழைப்பனுப்புகிறேன்.

—காட்சி முடிவு—

களம் 13 (2-10)

காட்சி : 13
இடம் : அந்தப்புரம்-உப்பரிகை.
நேரம் : மாலை.

[மலர் தொடுத்துக்கொண்டிருக்கிருள் மல்லிகை. மலரணையில் சாய்ந்தபடி இருக்கிருள், அமராவதி.

மல் : ஒரு செய்தி தெரியுமா உனக்கு ?

அம : சரிதான்! தினசரி இப்படி என்னை ஏன் கேட்கிருய் ? தினமும் செய்தி தொகுத்துச் சிதற அடிப்பவள் நீ தானே ! நீ சொல்வதை நான் கேட்டுக்கொண்டிருப்பது தான் எனக்குத் தெரிந்த செய்தி !

மல் : நாளைக்கு அவ்வையார் வருகிருராம் !

அம : அப்படியா! எங்கே தங்குவார்கள் ? நம் விருந்தினர் விடுதியிலா ?

மல் : அங்கு அல்லது ஆயிதேவி இல்லத்தில் தங்கலாம் !

அம : அவசியம் நான் பார்க்கவேண்டும்! அடி! நாளைக்கு அதிகாலையிலேயே நீ இங்கு வந்துவிடு! அப்பாவிடம் சொல்லிவிட்டு, முதலில் நாம் போய் சந்தித்து விடுவோம்.

மல் : நிச்சயமாக !... பாவம் ! இளம் பருவத்திலேயே வாழ்வை இழந்த அவர்கள், இவ்வளவு நாட்களும் சன்யாசினி போலவே வாழ்ந்து வருகிருர்கள்! அதனுல், இந்த முதுமையிலும் என்ன அழகாக இருப்பார்கள் தெரியுமா ?

அம : முன்பு வந்தபோது நான் பார்க்கவில்லை...நீ பார்த்தாயா ?

மல் : உம்...வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

அம : என்ன சொன்னுர்கள் ?

மல் : தான் வாழ்ந்த கதையும் வாடிய கதையும்...வரலாறு போலச் சொன்னுர்கள்.

அம : அதை எனக்கும் கொஞ்சம் சொல்லேன்.

மல் : அதாவது...உறையூர் தானுதிபதியார் என்பவர் அவரது தந்தையாராம். கமலக்கண்ணி என்பவர் தாயாராம். இவர் அவர்களது...

அம : மகளாராம் !

மல் : ஆம்...சின்ன வயதிலே அவர் கணபதி என்பவரைக் காதலித்தாராம். இருவரும் உயிரும் உடலுமாகப் பழகினுர்களாம். கணபதி, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவராம். அதனுல், தானுதிபதி, அவருக்குத் தன் மகளைத் தரமுடியாது என்று கூறி அவ்வையாரை அறைக்குட் போட்டு அடைத்துவைத்து விட்டாராம். "நீ உன் மனதைத் திருத்திக்கொண்டு, நான் தேர்ந்தெடுப்பவனை மணந்துகொள்வதானுல் விடுவிக்கிறேன். இல்லையேல், நீ இறந்துபட்டாலும் கவலை இல்லை" என்று கூறிவிட்டாராம். அவ்வையார் அல்லும் பகலும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருந்தும் தானுதிபதியின் மனம் இளகவில்லையாம். அதுவுமன்றி, வேறெரு இடத்தில் அவ்வையாருக்குத் திருமணமும் பேசி முடித்துவிட்டாராம்.

அம : பிறகு ?

மல் : திருமணத்தன்று காலையில், அவ்வையாரை அடைத்து வைத்திருந்த அறையின் சிறு கதவுக்கு எதிரில் மாலையும் மஞ்சளும் வைத்திருந்தார்களாம். அவ்வையார் மெதுவாக அதிலிருந்து ஒரு மாலையை எடுத்து வைத்துக் கொண்டுவிட்டாராம். எல்லோரும் வந்து, அந்த அறைக் கதவைத் திறந்தபோது, அவ்வையார் தன் கழுத்தில் அந்த மாலையைப் போட்டுக்கொண்டு, ஒரு தூணைக் கட்டிப் பிடித்தபடி, "கணபதி என்னை மணந்துகொண்டான்! கணபதி என்னை மணந்துகொண்டான்!" என்று கத்தினுராம். பைத்தியம் போல் நடித்து வேகமாக வெளியே ஓடினுராம். ஓடி, கணபதியின் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது அங்கு கணபதி பிணமாகக் கிடந்தாராம். அழுது புலம்பிய அவ்வையார், அன்றே கைம்பெண் கோலம் பூண்டாராம். அவ்ரை மணக்க வந்த மணமகன், "கைம்பெண்ணையா மணப்பேன்!" என்று பேசாமல் போய்விட்டானும்! அதுமுதல், கைம்பெண்ணுகவே வாழ்கிருராம்.

அம : ஆ!...உண்மையாகவா ?

மல் : பின் என்ன! அவர்களே சொன்னுர்கள் !

(தொடரும்)

தோழர்களே !
ஓர் இன்பச்சேதி !

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்
எழுதும்
புதிய தொடர்கதை
ஆகஸ்டு 20-ம் தேதி
இதழில் ஆரம்பமாகிறது
ஆம்; ஆகஸ்டு 20
நினைவிருக்கட்டும் !

எதிர்பாருங்கள்!
வளையாபதி முத்து கிருஷ்ணன்
குழுவினர் நடிக்கும்
மாங்கனி
கவிஞர் கண்ணதாசன்
தீட்டிய காதல் ஓவியம்!
சோரன் சேங்குட்டுவன்
கால்த்துக் காதல் கதை

ஆசிரியத் தோழருக்கு..

தென்னகத்திலும் தமிழ்ப்பெருங் குடி மக்கள் வதியும் வேற்று நாடு களிலும், தனக்கே உரித்தான தனி நடையில் சீரிய-கூரிய-நேரிய சொற்களைப் பெய்துத் 'திராவிட இனமுழக்கமும்'-கொள்கை விளக் கமும் தந்து வந்தது - வருகிறது- தென்றல் ஏடு.

தென்றல் ஏடு செந்தமிழ் பூங் காடு. தென்றல் ஏடு இதுவரை நமது இயக்கக் கருத்துக்களைக் தெளிவாக யார் மனமும் புண்படா மல்-பயனில் சொல் கூருமல், விளக்கி வந்தது.

சுவைக்கச் சுவைக்கப் புதுச்சுவை தந்த வளர் கதைகளையும்-கவிதை களையும் தந்து வந்தது.

எதையும் தாங்கும் இதயம் கொண்டு எஃகு உள்ளத்தோடு 'இன்னு செய்தாரையும்-இழிசொல் வீசியோரையும்' தன் பாசறை கற்றுத் தந்த பெருந்தன்மையால்- கண்ணியத்தால், அவர் நாண நன்னயம் செய்து வந்தது.

பூக்காட்டிலே பூநாகம் புகுந்தது போல தென்றலிலே 'சிலம்பறியாச் சிவஞானத்திற்கு' இடம் தந்து விட்டீர்கள். அணையப்போகும் விளக்கு, அணையப்போகுமுன் கொஞ்சம் பிரகாசமாய் எரிந்து பின் அணையும். இதே நிலையில் தான் மறத்தமிழரும்.

இவர், நிலையான கொள்கை இல்லாதவர்; சந்தர்ப்பவாதி; வட நாட்டுக்கு வணங்கிக் கொடுப்பவர்; அறப்போர் என்றால் அழகொழுகப் பேசிவிட்டு தலைமறைவாய்ப் போய் விடும் சுபாவக்காரர் என்பதை நாடறியாமலில்லை. மறத்தமிழர் வேண்டுமானால் மறந்திருக்கலாம். ஆனால், மக்கள் மன்றம் மறக்க வில்லை.

தமிழகம் இப்பெருமகனாரை (?) நன்கு அறிந்துகொண்டது. காங் கிரஸ் கணவனாலேயே இந்தத் திரு மாது உறுதியான கொள்கைப் பற்று என்ற கற்பு இல்லாதவள் என்று தள்ளப்பட்டவள் தானே! இத்தகையாருக்கு விளம்பரம் தரு வது வீண் தான்.

நரி ஊளையிடுவதைக் கேட்டு சிங்கம் நரியோடு போருக்குப் போக லாமா? பதில் சவால் விடலாமா?

தென்றலில் புயல் வீசவும் வேண் டாம். அதில் அரசியல் அறிவை- தமிழன் பண்பாட்டை - சிலம்பு நெறியை மறந்தவர்களுக்கு இடம் தரவும் வேண்டாம்.

குருபீடத்தில் 'அவசர சாமியும்' தந்தியில் ஆதித்தனும் செய்தால் பரவாயில்லை. தென்றலில் 'சோழ குமாரர்' செய்யக்கூடாது. சோழ குமாரர் நடை உள்ளத்தைத் தொடு கிறது. அதையும் நான் கூருமல் இருக்கமுடியவில்லை.

இவ்வளவையும், தென்றல் வளர வேண்டும் என்ற எண்ணத்தால் எழுதினேன். சரி என்றால் கொள் ளுங்கள். தவறு என்றால் தள்ளுங் கள். உங்கள் நேரத்தை வீணாக் கியமைக்கு மன்னியுங்கள்.

அன்புள்ள
ப. வரதராசுலு
பச்சையப்பன் கலலூரி சென்னை-30.

விளக்கம் வேண்டும்!

ஒரு புதுமையான செய்தி பத்திரிகையில் வெளிவந்திருக் கிறது.

"தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு ஜாகை வசதியளிக்க மத்திய சர்க்கார் திட்டம் தயாரித்துள்ளனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சென்னை சர்க்கார் இந்தத் திட் டத்தைப் பூர்ணமாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. தொழிலாளர்களுக்கு வீடுகட் டிக்கொடுப்பதற்கு சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரிடம் கடன் கேட்கவில்லை. இது சரியல்ல," என்று கோவை நகரசபைக் கூட்டத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசி யிருக்கிறார். இதில் எவ்வளவு உண்மை இருக்கும் என்பதல்ல நமது ஆராய்ச்சி. சென்னை சர்க்கார், டில்லிக்கு எவ்வளவு பயந்திருக்கிறது என்பதுதான். கேட்டால் சீறி விழுவார்களோ. கேடு நடந்து விடுமோ என்ற பீதி வடநாட்டு சர்க்காரை தென்னாட்டு சர்க் கார் மீது குற்ற சுமத்த வாய்ப் புக்கொடுத்திருக்கிறது. வரிப் பணத்தை கொட்டி கொடுத்து விட்டு, வசதி செய்துகொள்ள பணம் கேட்க அஞ்சும் கோழைத்தனம், பதவிகாத் துக்கொள்ளும் நளினம், 'சென்னை சர்க்காரே, நீ டெல் லியைப் பயன்படுத்திக்கொள்ள வில்லையேஏன்?' என்று அதட் டிக் கேட்கவைத்திருக்கிறது. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இந் தத் தகவலை காலங்கடந்து சொல்லியிருப்பதிலிருந்து, இனிமேல் பயனில்லை; சென்னை வாய்ப்பை இழந்து விட்டது என்பதைநன்குவிளக் குகிறது. மத்திய சர்க்காருக்கு சென்னைமீது கண்ணிருந்தால், கேட்காத சென்னைக் குழந் தைக்கும் கொடுத்திருக்கலாம்; 'அழுத பிள்ளைக்குத்தான் வாழைப்பழம்' என்ற முது மொழியை இது விஷயத்தில் டெல்லி பயன்படுத்திக்கொண் டிருக்கிறது. டி. டி. கிருஷ்ண மாச்சாரியாரின் குற்றச்சாட் டுக்கு சென்னை சர்க்கார் பதி லளிக்காவிடில் எதிர்ப்பு பெரு கத்தான் செய்யும்.

◉

சூழ்ச்சி வென்றிடுமா?

அம்மன் தரிசனத்திற்கு வருகிற அம்மாமிகள்; ஆலயத்தைக் கண்டு போக வரும் சிற்பசித்திரப் பித்தர்கள்; நாளை இந்நேரம் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றுளே, அந்த நாரீமணி, அவள் குறித்த நேரத்திற்கு கோயிலுக்கு வந்திருக் கிறாளா என்று தேடிவரும், சொந்த சுகம் கருதி சிந்தனை வளர்ச்சியை எதிர்க்கும் 'வய்தரல் இளைஞர்'கள். அத்தனை வகைப் பட்டோரும், பக்கிரிசாமியின் கடைவழியாக போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்கள்.

திடீரென்று எதிர்பாராத விதமாக தோட்டக்கார தாமோ தரன் பக்கிரி சாமியின் கடைக்கு வந்துவிட்டார். தாமோதரன் மலர்த்தோட்டம் வைத்து தொழில் நடத்துகிறவர். அவருடைய தோட்டத்து மலருக்கு எப்போதும் தனி மதிப்புண்டு. அவரு டைய தோட்டத்தில் பூக்கின்ற மல்லிகை, ரோஜா, மனோரஞ் சிதம், இவைகளில் ஏதோ ஒரு புது மணம் இருந்தது. அதற்கு காரணம் பண்டைக்காலத்து உரமுறை என்று தாமோதரன் அடிக்கடி சொல்லுவார். ஆனால் கடந்த இரு மாதங்களாக தாமோதரனின் தோட்டத்து மலருக்கு கிராக்கி குறைந்திருப்ப தாக பக்கிரிசாமி சொன்னது தாமோதரனுக்கு பெருத்த மன வேதனையைத் தரத்தான் செய்தது.

"என்ன பக்கிரிசாமி அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"உண்மை! உமது பூக்களிலே இப்போது வேறு வாடை வீசுகிறதே! அதனால்தான், அப்போது உமது பூக்களை வாங்கிச் சூட்டிக்கொண்ட பெண்கள் இப்போது அதை விரும்புவதில்லை. ஆனால், அந்தப் பெண்களுக்குப் பதிலாக வேறு சில புதுப்பெண் கள் வாங்குகிறார்கள். அதுமட்டும் உண்மை. மொத்தத்தில் வாங்கும் பெண்கள் குறைந்திருக்கிறார்கள்."

"அப்படியா! புதுவாடை மட்டமான வாடை என்று சொல் லுகிறீர்கள்!"

"மட்டமென்று சொல்லவில்லை. சுவை மாறியிருக்கிறது. அதனால் வாடிக்கைக்காரர்கள் புதுச் சுவையை வெறுக்கிறார்கள். புதிய சுவையை வேறு சிலர் வரவேற்கிறார்கள்."

"தோட்டத்துப் பணியாள் புதுவகையான உரமுறையைக் கையாண்டதின் விளைவு அது. நான் இனி சரிசெய்துகொள் கிறேன். என் பக்கிரிசாமி, சோமசுந்தரத்தின் பூக்கள் எப்படிப் போகின்றன?"

"அவை வழக்கம்போல போய்க்கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ, வர, வர, வாடை ஒன்றுகி வருகின்றது."

..."என்னையா வேடிக்கையாக இருக்கிறது, நீர் சொல்வது. இரண்டும் ஒரே வாடைதான் என்கிறீர். அவன் பூக்கள்மட்டும் குறையவில்லை என்கிறீரே! சரி அடுத்தமுறை பழையவாடையுடன் பூ அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டு தாமோதரன் விடை பெற்று வந்துவிட்டார்.

பத்துநாட்களுக்குப் பிறகு...

★

சோமசுந்தரம் சோபாவில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். அப்போது பூக்கடை பக்கிரிசாமி உள்ளே புகுந்தார்.

"வாயா பக்கிரிசாமி! பூக்கள் எப்படி விலை போகின்றன?"

"பரவாயில்லை! ஆனால் உங்கள் பூ இப்படியே மணம் வீசிக்கொண்டிருந்தால் 'ஆமையும், முயலும்' கதையாகத்தான் முடியும்!"

"பக்கிரி, என்னய்யா சொல்கிறீர்?"

"தாமோதரன் பூ இருக்கிறதே, அது இப்போது உன் பூவைப்போலவே மணக்கிறது. அவனுடைய பூக்களை பழைய வாடிக்கைக்காரர்கள் வாங்கவில்லையே தவிர, புதிய பெண்கள் வாங்காமலில்லை. நாளடைவில் அவர்கள் எண்ணிக்கை வளர்ந்துவிட்டால், துவக்கத்திலே வேகமாக ஓடிய முயல், பாதி வழியில் தூங்கிவிழுந்த கதையாகிவிடுமே என்று சொல்கிறேன். தாமோதரனின் நேரடிப் பார்வையும், அவரது புதிய தோட்டக் காரனின் கண்காணிப்பும் சேர்ந்தால் உன்பாடு ஆபத்துதான்."

"அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?"

"பயப்படாதே, நான் பொது வியாபாரியாக இருந்தாலும் தாமோதரனை மேலெழும்ப விடமாட்டேன். அதற்காக ஒரு புது யுக்தியைக் கையாண்டிருக்கிறேன். போன கிழமை தாமோதரன் என் கடைக்கு வந்தார்; அவரிடம் உன் பூவை வாங்குவோர் குறைந்து வருகிறார்கள்; பழைய வாடை உன் பூவில் இப்போது இல்லை யென்று பழைய பெண்கள் சொல்லுவதாகச் சொல்லி யிருக்கிறேன். அவரும் தலையாட்டிவிட்டு வந்திருக்கிறார். உண் மை என்ன தெரியுமா? தாமோதரனின் பூக்கள் இப்போது உன் பூவைப்போலவே மணம் வீசுகின்றன. இந்நிலை நீடித் தால் காலக்கிரமத்தில் உன் பூவின் விலை வீழ்ந்தவிடலாம். பூவின் மணத்தில் வேறுபாடு காணப்படவில்லையானால் உன் பக்கம்தான் குறையும். ஜாக்கிரதை! தாமோதரன் அநேகமாக இந்த முறை பழையபடி பண்டைக்கால உரமுறையைத் தான் கையாளுவார். நான் வைத்த 'மிரட்டல் ஏவல்' பலிதமாகா விட்டாலும், எதிரியை பயங்கொள்ளச் செய்யத் தவறாது. வரட்டுமா?"

★

'நேருவின் ரஷ்யப் பயணம்', 'தேபரின் புதுச்சேரி யாத் திரை'--இவைகளில் எதையேனும் ஒன்றை இதற்கு ஒப்பிட்டுப் பாருங்கள்.

இராவணன் திராவிடனா, ஆரியனா?

அண்மையில் ஒரு சில கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்கள், 'இராவணன் திராவிடன் என்பதற்கு என்ன ஆதாரம்?' என்ற கேள்வியை எழுப்பியிருப்பதாக மாணவத் தோழர்கள் நமக்கு ஏராளமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆதாரம் கேட்டோருக்கும், ஐயம் கொண்டோருக்கும் விளக்குமுகத்தான் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை M.A., L.T. அவர்கள் அடுத்த இதழில் 'இராவணன் திராவிடனா, ஆரியனா?' என்பது பற்றி எழுதுவார்கள்.

[ஆர்.]

வாழ்வது எப்படியோ?...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களனைத்தும் வெறும் 55 லட்சத்துக்குக் குறைவான தொகைகளைத் தான் ஈடுபடுத்தியுள்ளன.

இவைகளினால் கம்பெனிகளுக்குக் கிடைக்கும் லாபத்தைவிட நமது கண்களை உறுத்துவது, வடநாட்டு கம்பெனிகள் பெரிதும் வடநாட்டுத் தொழிலதிபர்களுக்குத்தான் பெரும் தொகைகளைக் கடன் தந்து உதவுவதும், அவர்கள் தொழில் இவைகளின் உதவியால் பெருகிக் கொண்டே போவதுமாகும். வடநாட்டவரின் ஆதிக்கத்தில் உள்ள கம்பெனிகள் மனமுவந்து தக்க அளவில் தென்னாட்டுத் தொழில்களுக்கு உதவுமென்று கனவுகூடக் காண முடியாது! ஆனால், இந்தக் கம்பெனிகளுக்குத் தென்னாட்டில், தென்னாட்டுக் கம்பெனிகளைவிட நல்ல வருமானம் கிடைக்கின்றது. பெரிய கம்பெனி, பெரிய கம்பெனி என்று சொல்லி, அதனுடைய வரவு செலவுகளைக் கோடிக்கணக்கில் பேச ஆரம்பித்தவுடன் அவைகளில் சேரவேண்டும் என்ற ஆர்வம் இயற்கையாகத் தலைதூக்குகிறதே யன்றி, நமது பணம் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின்மூலம் வடநாட்டவருக்குப் பெரும் லாபமாகவும், வடநாட்டில் தொழில் வளர்ச்சிக்கும் போய்ச் சேருகிறதே என்ற உணர்ச்சி உண்டாவதில்லை.

எனவே, நாட்டின் வாணிபத்துக்கும் தொழில் நடப்புக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாத நிலையங்களான பாங்கிகளும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளும் வடநாட்டவரின் ஆதிக்கத்தில் உள்ளதையும் மென்மேலும் அவர்களது ஆதிக்கம் வலுப்பதையும் இன்று மறுப்பவரெவரும் இருக்கமுடியாது.

அடுத்து, பெரும் தொழில் துறைகளான பஞ்சு, சணல், நிலக்கரி, இரும்பு, தோட்டங்கள் (தேயிலை, காபி முதலியவை,) சிமண்ட், சர்க்கரை, எஞ்சினியரிங் மின்சாரம். கப்பல், காகிதம், வனஸ்பதி, ஆகிய துறைகளிலும் வடநாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதையும், தென்னாடு எந்த அளவு பின்தங்கி உள்ளது என்பதையும் காணுவோம்.

வெளிவந்துவிட்டது!

பல்லாயிரக்கணக்கான 'தென்றல்' வாசகர்களின் உள்ளங்களைக் கவர்ந்த மிகச்சிறந்த சரித்திர நவீனம்!

கண்ணதாசன்

எழுதிய

ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி

விலை ரூ. 4—8—0

முன் பணம் அனுப்பியோ, வி. பி. மூலமோ பெற்றுக்கொள்ளவும்.

அருணோதயம் சென்னை-14. | அருணா பப்ளிகேஷன்ஸ் சென்னை-17.

இரண்டு இடங்களிலும் கிடைக்கும்.

நூல்நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்திலேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

—கண்ணதாசன்

பொன்னரசி

குறிப்பிட்ட ஒரு சில புத்தகத்தின் பெயர்களைச் சொன்னதுமே, அதன் ஆசிரியரின் பெயர் தானாக நினைவுக்கு வருவதுண்டு. அப்பேர்ப்பட்ட புத்தகங்களோடு தன்னுடைய படைப்புகளையும் இணைத்துக்கொண்டவர் இந்நூலாசிரியர். சில ஆண்டுகளுக்குமுன்பு 'வாழ்க்கைத்தோணி' என்று ஒரு தமிழ் நாவல் வெளிவந்தது. அந்த நேரத்தில் அதன் ஆசிரியரான தோழர் க.நாராயணன் அவர்கள். 'வாழ்க்கைத்தோணி நாராயணன்' என்று சொன்னால் தமிழ்நாட்டில் யாரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அந்த புத்தகம் விலையாகியது. ஆறு பதிப்புகள் வரை அந்தப் புத்தகம் வெளிவந்தது. அந்த வாழ்க்கைத்தோணி-நாராயணன்தான் இந்தப் 'பொன்னரசி'யையும் தந்திருக்கிறார்.

பொன்னரசி. வரலாற்று நிழல் படிந்த பெருங்கதை. ஆசிரியர். மதப்போரை மனதில்கொண்டு இந்தக்கதையை உருவாக்கியிருக்கிறார். சைவத்தையும், சமணத்தையும் மோதவிட்டிருக்கும் தோழர் நாராயணன் அவர்கள், அவருடைய முன்னுரையில் 'இதைப்படித்துவிட்டு யாரும் வருத்தப்பட்டால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல' என்று கூறியிருப்பதை என்னால் நம்ப முடியவில்லைதான். மொத்தத்தில் 'பொன்னரசி'யில் அவரது கருத்தை நிலைநாட்ட முற்பட்டிருக்கிறார்.

கதை, படிப்பதற்கு சுவைமிக்கதாக இருக்கிறது. வாசகர்கள் படிக்கும்போது, அந்தந்தக்கட்டங்களில் அவர்களின் முகக்குறியையே மாற்றிவிடும் வகையில் ஆசிரியர் கதையை அமைத்திருக்கிறார். கதாபாத்திரங்களின் பெயர்கள் அத்தனையும் பொருள் கொண்டதாக அமைத்திருப்பது பெரிதும் பாராட்டத் தக்கதுதான்.

ஆசிரியர் க. நாராயணன்; விலை ரூ.2-8-0; வெளியீடு-பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை 1.

★

மலேயாவில் பெரியார்

தலைவர் பெரியாரின் மூவண்ண முகப்புடன் கூடிய பெரியாரின் மலாய சுற்றுப்பயண நிகழ்ச்சிகளின் தொகுப்பு இந்நூல். 72 பக்கங்கள். பக்கத்துக்கு பக்கம் புகைப்படங்கள். தோழர்கள் சு. ராஜாராம். பி.ஏ., வை. திருநாவுக்கரசு, கோ. சாரங்கபாணி முதலியோரின் கட்டுரைகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. 'மலேயாவில் பெரியார்' திராவிடர்களனைவரும்படிக்கவேண்டிய புத்தகம்.

வெளியீடு: கே. பிச்சையன், 199. அப்பர் சிராங்கூன் ரோடு. சிங்கப்பூர்-13. **விலை 75 காசு**

★

காளிதாசன்

காளிதாசன் பற்றிய புதிய கண்ணோட்டம். ஆசிரியர் இதை புனைகதை என்கிறார். நடை நன்றாக இருக்கிறது. தோழர் இளஞ்சேரவின் எழுத்து வேட்கைக்கு 'காளிதாசன்' ஒரு எடுத்துக்காட்டு.

வெளியீடு: இராசன் பதிப்பகம், திருவனந்தபுரம்-விலை அணா 4, நூலாசிரியர் இரா. இளஞ்சேரன்.

★

சரசுவதி

நல்ல கட்டுரைகள் நிறைந்த மாத இதழ். வெளிநாட்டுச் செய்திகள் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. விலை இரண்டணா: ஆசிரியர் வ. விசயபாஸ்கரன். அல்லா ம லை செட்டியார் ரோடு. சென்னை-7.

★

தமிழ்நாடு டைம்ஸ்

தமிழும் ஆங்கிலமும் கொண்ட மாதமிருமுறையாக வெளிவரும் அரசியல் பத்திரிகை. இதில் கார்சாரமான அரசியல் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. துணிவு பாராட்டத்தக்கது. தமிழ் கட்டுரைகளின் தலைப்புகள், நமது இளைஞர்கள் படித்து மகிழ்வுறுவதற்கு ஏற்ற வகையில் அமைந்திருந்தாலும், அதில் கொஞ்சம் மாற்றம் வேண்டும் என்பது எமது ஆசை. எட்டுப் பக்கங்கள். விலை ஒரு அணா.

★

கிடைக்கப்பெற்றோம்:

தமிழ் அமுது—ஆசிரியர் காதர் மஸ்தான். தமிழ் மன்றம். அர்ச் அந்திரேயாக் கல்லூரி கம்பளை.

★

நண்பன்—வார இதழ் கொழும்பு.

★

சிறு கதை

போகிறேன், வா!

எஸ். எஸ். தென்னாசு

“பெருமைக்குரிய நீதிபதி அவர்களே, இந்தக் கடிதத்தைக் கொண்டு அலசிப்பார்த்தால் சப் இன்ஸ்பெக்டர் சரவணன் வேண்டுமென்றே மோட்டாரைக் கவிழ்த்திருப்பதாகத்தான் தோன்றுகிறது. கடிதத்தைப் படிக்கிறேன். கருத்தைக் கவனிக்கும்படி மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்;

“வாணி, கடைசி முறையாக உன் திருமுகத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று எவ்வளவோ முயன்றேன். முடியவில்லை கண்ணே. சூழ்நிலை என்னை உன்முன் கொண்டுவர அறவே மறுத்துவிட்டது. நான் போகிறேன். நீ உன் வாழ்வை முடித்துக்கொண்டுவா!”

துர்பாக்கியசாலி.

இது, சப்இன்ஸ்பெக்டர் சரவணன் பிணமாகிக்கிடந்தபோது அவரது சட்டைப்பையில் இருந்து எடுக்கப்பட்ட கடிதம். இந்தக் கடிதத்தைக் கொண்டே, சரவணன் தற்கொலை செய்துகொள்ள எண்ணித்தான் போலீஸ் ஜீப்பை, மரத்திலே மோதிறச் செய்திருக்கிறார் என்பதை நிரூபிக்கமுடியும். இந்த மோட்டார் எதிர்பாராத விதமாக மோதுண்டது என்று கருதினால், இந்த அறிவிப்புக்கடிதம் சரவணனின் சட்டைப்பைக்குள் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆகவே, கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் சரவணனின் மனைவி வாணி, அவளது கணவன், சர்க்கார் பணத்தை தன் சொந்த வெறுப்பு கருதி நாசம் பண்ணியதற்கு, நஷ்ட ஈடாக ரூ பத்தாயிரம் சர்க்காருக்குத் தந்தாகவேண்டும்”- இவ்வாறு சர்க்கார் வக்கீல் சிங்கப் பெருமாள் அடித்து விளாசினார். நீதிமன்றத்தில் திரளாகக் கூடியிருந்த கூட்டம் பெருமூச்சுவிட்டது; அவர்களில, சரவணனை மனதிற்குள் திட்டியவர்களும் இல்லாமலில்லை.

★

“தீ! துறைமுகத்தில் கப்பல் தீப்பற்றிக்கொண்டது. அனைல்பட்டு, சுற்றியுள்ள கீற்றுக்குடிசைகளெல்லாம் கருகிப்போயின. ஐந்தாறு குழந்தைகள் அவிந்துமாண்டன.” நகர்முழுதும் இப்படி ஒரே பரபரப்பு, இத்தனை துன்பத் தகவல்களையும் கடந்து அன்று வாணியின் முகத்தில் ஒரு இன்பக்குறி படிந்திருந்தது தன் கணவன் வேலை பார்க்கும் கப்பலடியிலேதான் ‘தீ விழா’ என்றாலும், அந்தக் கவலையை ஒரு புதிய இன்பச்சேதி கொன்று கொண்டிருந்தது.

“வாணி! வாணி!”

“இதோ வந்துட்டேன்”-கதவைத் திறந்தாள்.

“என்ன ஒரே அலங்காரம்! தகவல் உனக்கு முன்பே கிடைத்துவிட்டதா வாணி!”

“ஓ! மூன்று மணிக்கே கடிதம் வந்துவிட்டதே!”

“கடிதமா?-புருவங்கள் வளைந்தன.”

“ஆமா! இதோ!” கடிதம் ஒன்றைக் கொடுத்தாள்.

சரவணன் கடிதத்தைப் படித்தான். சிந்தனை! கண்களின் பார்வை சக்தி யோசனையில் கலந்துவிட்டது. விழிகள் மட்டும் ஒளி இழந்தவைபோல எங்கோ பார்த்துக்கொண்டிருந்தன.

“என்ன யோசிக்கிறீர்கள்? அண்ணன் தனபால் எழுதியிருக்கிறது!”

“ஆம் தனபாலன்தான் எழுதியிருக்கிறார். வாணி, இரு வருகிறேன்” - ஜீப்கார் துறைமுகம் நோக்கிப் பறந்தது.

இதயத்தை எடை போடுவதற்கு பெண்கள் எளிதிலே இடம்கொடுக்க மாட்டார்கள் என்பது உண்மைதான்-அவ்வளவு ஆழத்திலே இருக்கிறது அவர்களது உள்ளம் என்பதும் மெய்தான். ஆனால், அதிர்ச்சிக்கும் சோகத்திற்கும் மட்டும் மிக விரைவிலே உள்ளத்தைத் தாக்க வழிவிட்டு விடுகிறார்கள் அவர்கள்.

வாணி திகைத்தாள். தனபாலன் தன் அண்ணன் என்று கணவனுக்குத் தெரிந்தும் ஏன் இவ்வளவு சந்தேகம் என்று அவள் உள்ளம் அடிக்கடி கேட்டுக்கொண்டது,

★

“பர்வம்! நல்ல கேசை கையும் களவுமாகக் கண்டுபிடித்தார். கைக்கு எட்டியது வாய்க்கெட்டவில்லை. நிச்சயமாக பதவி உயர்வு கிடைத்துவிடும் என்ற பூரிப்போடு தான் வீட்டுக்குப் போயிருக்கிறார். இந்தச் சேதி அவருக்குத் தெரிந்தால் எவ்வளவு கஷ்டப்படுவார். போலீஸ் இலாகாவில் பதவி உயர்வு என்பது சாமான்யமான காரியமா? ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஊமைப் பெண்ணுக்குக்கூட, இல்லாதவைகளையும், பொல்லாதவைகளையும் சொல்லி மணமுடித்துவைத்துவிடலாம்; மேலதிகாரிகளிடம் பதவி உயர்வு பெறுவது இருக்கிறதே அது காட்டுப்பசுவிடம் பாலுக்குப் படியேந்தி நிற்பதுபோலத்தானே”— துறைமுகத்துப் போலீஸ்காரர்கள் ‘வசன ஒப்பாரி’ வைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் சரவணனின் ஜீப் வந்து நின்றது.

“காமேஸ்வரா!”

“எசமான்!”

“எங்கே அந்த ஆசாமி?”

“...........?”

“என்னய்யா விழிக்கிறீர்!”

“அவன் லாக்கப்பிலிருந்து ஓடிவிட்டானும் எசமான்!”

“எனை!”

“ஆமாங்க! இப்பத்தான் எங்களுக்குத் தகவல் கிடைத்தது. டி. எஸ். பி. வருவதாக போன் பண்ணியிருக்காருங்க!” — கான்ஸ்டபிள் காமேஸ்வரன் நடுங்கிக் கொண்டே விஷயத்தைச் சொன்னான்.

கைதியின் ஓட்டம், டி. எஸ். பி. யிடம் தனக்கு புகழை வாங்கித் தராவிட்டாலும், பழி தன்மீது விழவழியில்லை என்று மனச்சாந்தி செய்துகொண்டார் சரவணன். கைதியைத் தப்பவிட்டது சரவணன் குற்றமல்லவே! துப்பாக்கிக்குப் பேசும் ஆற்றல் இருப்பதாகவும், தூரத்தில் ஆள் வரும்போதே அது தன்னை எழுப்பிவிடும் என்றும் நம்பிக்கொண்டு, துப்பாக்கி தாங்கியபடி துயில்கொள்ளும் ‘தீரர்’கள் சாதனையல்லவா அது!

ஒரு பக்கம் பதவி உயர்வு, மற்றொரு பக்கம் பாசம், இடையிலே சரவணன். அவரது மூளை குழம்பியது. ஓடிப்போன கைதியைப் பிடித்துக் கொடுத்தால் சரவணனுக்கு புகழ் கிடைக்கும்; அதே நேரத்தில் தன்னுடைய மைத்துனனுக்கும் பெருந்தண்டனை கிடைக்கும். ஆம் ஓடிப்போன கைதி சரவணனின் மைத்துனன் - வாணியின் அண்ணன் தனபாலன்!

? ? ?

★

தனபாலன் அந்தமானுக்குச் செல்லுகையில் வாணிக்கு பதினைந்து வயது. பருவமாகி, கூரை வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்தாள். பத்தாவது வரை படித்தும் பயனில்லாமல் அந்தமான் தேக்குக் காட்டுக்கு மேஸ்திரியாகச் சென்றான் தனபால்; “அந்தமானுக்குச் செல்லுகிறேன்’ என்பது அபகீர்த்திக்கு அடையாளமாயிற்றே என்ற ‘சொல்’ மறைந்துகொண்டிருக்கும் காலமாகையால் தனபால் எளிதில் துணிந்துவிட்டான் அங்கு போக. இல்லத்தில் வயோதிகத் தந்தை, வயது வந்த தங்கை-இருவரையும் விட்டுப் பிரிந்து அந்தமான் சென்றுவிட்டான். குடும்பத்தின் தலைமகன்-தந்தைக்குக் கொள்ளிவைக்க அவன்தான் உரிமைப்பட்டவன். என்றாலும் ஊர்ப்பழிக்குப் பயந்து தொழில்புரியக் கப்பலேறினான்.

பூ, கரியாயிற்று; காய், கனியாயிற்று; கனி, விதையானது. காலத்தின் வளர்ச்சிக்கு இவை சாட்சிகளாயின.

“தங்கைக்குக் கல்யாணம்-உடனே புறப்பட்டுவா’ - தந்தை கடிதமெழுதினார். தனபாலன் எவ்வளவோ முயன்றும் சர்க்கார் பாஸ்போர்ட் வழங்கவில்லை. இரண்டாண்டு காலம் கஷ்டப்பட்டுச் சேர்த்துவைத்திருந்த இருநூறு ரூபாயை மட்டும் வாணியின் திருமணத்திற்கு அன்புக்காணிக்கையாக அனுப்பியிருந்தான். அண்ணன் திருமணத்திற்கு வரவில்லையே என்று கவலைதான் வாணிக்கு; வாணியின் கவலைக்கு சர்க்காரின் மனதை மாற்றக்கூடிய சக்தியிருந்தால், அண்மையில் டில்லியில் கொல்லப்பட்ட தமிழச்சியின் பெருமூச்சில் டில்லியே பிடி சாம்பலாகியிருக்கவேண்டுமே!

வாணியின் திருமணத்திற்கு தனபால் போக முடியாவிட்டாலும், தன்னுடைய தந்தை சுமந்துகொண்டிருந்த பெரும்பாரம் இறக்கப்பட்டதற்காக அவன் உள்ளூர மகிழாமலில்லை. மகிழ்ந்தான் - நண்பர்களுக்கு சிற்றுண்டி வாங்கிக் கொடுத்தான்.

ஆறு மாதங்களுக்குப்பின் ஒரு நாள், தனபாலுக்குத் தந்தி வந்தது; ‘தந்தை காலமானார். புறப்பட்டு வா’ என்று அந்தநேரத்தில்தான் தேக்குப்பலகைகளின் ஏற்றுமதி வேலை தொடங்கியிருந்தது. அதனால் தந்தையின் சடலத்தைக்கூடப் பார்க்க அனுமதிக்கவில்லை அரசாங்கம். ‘உனக்கென்று ஒரு புதுச் சட்டமா?’என்று மிரட்டினார்கள் அதிகாரிகள். மிரட்டலுக்கு ஆயுள்குறைவு என்று எந்த முடி அரசும் உணர்ந்து கொள்ளாதிருக்கும்போது இவர்களுக்கு மட்டுமா முன்னடிப்புரிந்துவிடும்!

★

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தனபாலன் தாயகம் புறப்பட்டான். தன் வரவை முன்கூட்டியே தன் தங்கைக்கு கடிதத்தில் எழுதியிருந்தான். அந்தக் கடிதம் தான் துறைமுகத்திலே எண்ணைக் கப்பல் எரிந்த தினத்தன்று வந்து சேர்ந்த கடிதம்; அந்தக் கடிதம் தான், வாணியைப் பார்க்க ஆவலுடன் வந்த சரவணனை கவலைக்குள் ளாழ்த்தி திரும்பி துறைமுகத்திற்கு விரட்டியடித்த கடிதம்.

தனபால் வந்த கப்பல் சரிபகுதி எண்ணைப்புட்டிகள் கொண்டது. சிகரெட்டிற்கு சிந்தனையைத் தூண்டும் சக்தி உண்டு என்று, தனது பழக்கத்தைக் கொண்டு சிகரெட்டுக்கு குணம் தந்தவனல்ல தனபால்; பேச்சுத்துணைக்கு ஆளில்லாத நேரத்தில், சிகரெட் குடிப்பதை ஒரு தொழிலாகக் கருதி பழக்கிக்கொண்டவனாகையால் கப்பலிலும் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு வந்தான். முடிவில் அந்த சிகரெட்டின் இறுதித் துண்டை அவன் தூக்கி எறிந்தது ஒரு எண்ணைப்புட்டிக்குள் விழுந்துவிட்டது. அதன் விளைவு? கப்பலே எரிந்துவிட்டது. தனபாலும் கையும் களவுமாகப் பிடிபட்டான். பிடித்தவர்தான் சப் இன்ஸ்பெக்டர் சரவணன்.

★

தனபாலைத் தேடி சரவணன் நகர்முழுதும் அலைந்தார். சாந்தோம் கடல் கரையில் தீயால் வெந்த உடலோடு ஒரு பிரேதம் கிடப்பதாகச் செய்தி கிடைத்தது. சரவணன் அங்கு விரைந்தார். தன்னுடைய மைத்துனன் தனபால் பிணமாகக் கிடந்தார். அவரது வலது கால் வெந்து பூவாகி யிருந்தது.

“வாணி, கடைசிமுறையாக உன் திருமுகத்தைப் பார்த்துவிடவேண்டுமென்று எவ்வளவோ முயன்றேன். முடியவில்லை கண்ணே. சூழ்நிலை என்னை உன்முன் கொண்டுவர அறவே மறுத்துவிட்டது. நான் போகிறேன். நீ உன் வாழ்வை முடித்துக்கொண்டு வா!”

துர்பாக்கியசாலி.

என்று எழுதப்பட்ட ஒரு கடிதமிருந்தது. சரவணன் கடிதத்தை எடுத்து தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, தனபாலின் பிணத்தையும் ஏற்றிக்கொண்டு துறைமுகம் புறப்பட்டான். வழியிலே மோட்டார் கவிழ்ந்தது. சரவணன் பிணமானான், தனபாலின் உடலும் கூழாயிற்று. சரவணன் பைக்குள் இருந்த தனபாலின் கடிதம், சரவணன் தற்கொலை செய்து கொண்டான் என்று நீதிமன்றத்தை முடிவுகட்டச் செய்துவிட்டது. ‘போகிறேன், வா!’ என்று அண்ணன் தங்கைக்கு எழுதிய கடிதத்தை, நீதிமன்றம், கணவன், மனைவிக்கு எழுதியதாகத் தீர்ப்பளித்துவிட்டது.

சரவணன், வாணியை வரச் சொல்லிப் போய்விட்டான்; வாணியும் போயிருக்கக்கூடும்.

கண்ணகி

வார இதழ்

மன்மத ஆவணி முதல்

ஞாயிறுதோறும் வெளிவரும்

ஆசிரியர்:

சக்தி மோகன்

விலை இரண்டணா.

★

277, மேலமாசி வீதி,

மதுரை.

வெண்பாப் போட்டி

11. செந்தமிழா இன்பத் திராவிடா தென்னகத்தில் இந்திவரு மானல்நீ என்செய்வாய் ?—

(இரட்டைப் புலவர் முறை)

வெண்பாப் போட்டி 11 க்கு வந்துள்ள வெண்பாக்களில் பரிசு பெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்களையும் சென்றஇதழில் வெளியிட்டுள்ளோம்; மீதமுள்ளவைகளை கீழே தந்துள்ளோம்.

செந்தமிழா இன்பத் திராவிடா தென்னகத்தில்
இந்திவரு மானல்நீ என்செய்வாய்? சொந்தமுள
தாளமுத்து நடராசன் சென்ற வழியான்பற்றி
சீலமிகு தாய்த்தமிழ்காப் பேன் !

—கபிலன், சென்னை-5.

★

--கந்தனுடன்
நின்றிடினும் கால்வயிறு உண்டிடினும் இன்னுயிர்தான்
சென்றிடினும் இந்திதனைக் கொல்.

—சோ. பாலகிருட்டிணன், காரைக்குடி.

★

--தந்தால்
காதியற்று வீதியிலே வீண்போகச் செந்தமிழன்
மேதினியில் வாழ்வானே கூறு.

—ஆ. ரா. இறையன், போத்தனூர்.

★

--சிந்தனையாம்
நந்தமது அண்ணாவின் நாக்கூறும் கட்டளையால்
செந்தமிழைக் காத்திடுவேன் சேர்ந்து.

—சி. வரதராசன், பொட்டனேரி.

★

--சொந்தத்தாய்
இன்னலுற வண்டமிழன் வாளா இருந்திட்டான்
என்றபழி ஏற்பாயோ ஈண்டு ?

—இராசன், செங்காலிபுரம்.

★

--நற்தமிழைக்
காக்கக் கருதிக் கடிதேகி வெஞ்சமரில்
யாக்கையை அர்ப்பணிப்பேன் யான்

—க. வி. வரதன், சென்னை-23.

★

--சந்ததமும்
தென்தமிழோ டேனைத் திராவிடமும் குன்றுதலால
கன்றலைசு(து) என்றெதிர்ப்பேன் நான்.

—வீ. ரா. நடராஜ பிள்ளை, ஆளூர்.

★

--கொந்தளித்த
செந்தமிழர் வெஞ்சமரில் தோள்கொடுக்க தாயகம்மீட்(டு)
இந்திமிரண் டோடச்செய் வேன்.

—சங்கமணி, பொள்ளாச்சி.

★

--சுந்தரியே
தாய்மொழியைச் சாய்க்கவரும் தாசிப்பெண் ணுமவளை
மாய்த்தே மடித்திடுவேன் காண்.

—அ. இராமசாமி, பி.ஏ., நம்பியூர்.

★

--என்றனுயிர்
தந்தேனும் அன்னைத் தமிழ்காப்பேன் ஓர்கொடியும்
இந்தியினை வாழவிடேன் இங்கு.

—'தமிழவேள்', வேலூர்.

--என்றனுயிர்
தந்தேனும் இந்திமொழி தானழியக் கண்டேனுயிர்ச்
செந்தமிழைக் காப்பேன் திடம் !

—'தமிழ்நேயன்', நாச்சியாபுரம்.

★

--எந்தமிழில்
காதியிலா, இந்தியெனும் நஞ்சு கலந்தவனைப்
பாதியாய்த் துண்டிப்பேன் பார் !

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

--எந்தமிழா
பொங்கு கடற்றிரையிற் பாய்ந்தெழுவென், புன்மொழிதன்
வெங்குருதி வீழ்த்தி விழ.

—'கவிதையன்பன்', திருச்சிராப்பள்ளி.

★

--தென்றல் கேள்
மந்திவந்து மாந்தோப்பை அழித்திடப்பார்ப் பேனே
முந்திவந் தோட்டுவேன் நான்

—விந்தை அரசு, அமிர்த நகர் காலனி, தாம்பரம்.

★

--மைந்துடைய
பைந்தமிழ்ச்செந் கட்புலிகள், பாய்ந்திடிலோ, பார்மேவும்
இந்திகதி என்கதி யாகும் ?

—சி. அல்லாபக்ஸ், இராமநாதபுரம்.

★

--தந்தித்தூண்
சாய்த்துப் புகைவண்டிச் சங்கிலியைத் தானிழுப்பேன் !
மூச்சுநின்று சாகும் மொழி !

—சி. வெற்றிவிழைஞன், கோயமுத்தூர்.

★

◉ *--இந்திப்பெண்*
மூக்கை உடைத்து முதுகெலும்பைப் புண்ணாக்கி
காக்கை அறுத்திடுவேன் நான் !

—சோம. தமிழ்ப்பிரியன், பாகனேரி.

★

--நந்தமிழ்
நாட்டவரை யெல்லாமென் காவன்மை யாற்கூட்டி
ஓட்டுவிப்பேன் இந்தி உணர்.

—முருகு, வரகூர்.

★

--எந்தமிழர்
வாழ்வை அழிக்கவரும் பாம்பென்றே எண்ணியதை
பாழ்படுத்திக் கொன்றிடுவேன் பார்.

—மெ. அருமைநாதன், கிழச்சிவல்பட்டி.

★

--வந்தால்
எதிர்ப்பேன், மடமங்கை ஏங்கி இருக்க,
மதிப்பில் முடமங்கை ஏன் ?

—பா. வேலன், கோயமுத்தூர்.

★

--வந்தாக்கால்
முற்றும் பயின்று முதன்மை தமிழ்க்களித்து
வெற்றிக்கொடி நாட்டு வேன்.

[இந்தி ஆதரிப்பவர் கருத்து]

—பழ- ஆவிடையப்பன், பட்டுக்கோட்டை.

★

--வந்தால்
வரவேற்பேன், செந்தமிழன் வாழ்வு குலையின்
பிரிவேற்பேன் ஆவி பிரிந்து.

[இந்தி ஆதரிப்பவர் கருத்து]

—பா. வேலாசாமி, கோயமுத்தூர்.

★

--வந்தவழி
ஓட்டிடுவேன், இல்லையேல் இந்திமங்கை சென்னியில்
காட்டிடுவேன் என்கைத் திறம்.

—ந. பிச்சைமுத்து, பாகனேரி.

★

◉ *--இந்தாரும்*
போனமச்சான் பூமணக்கப் பேர்ந்தான் திரும்பிவெனில்
சீனிமச்சான் தேர்எடுப்பான் செப்பு !

—"சீனி", காரிமங்கலம்.

★

--குந்திப்
பிடிப்பேன் பிடித்துப் பிடிபெற்ற பின்னர்
அடிப்பேன் முகத்தில் அறைந்து.

—எஸ். பங்காரு, கோவை.

◉ இவற்றிற்கும் பரிசு வழங்கப்பெறும்

வாசன், காரைக்குடி.

வாழ்க்கைப் போரில் மனிதனுக்கு எதிர்முகாமில் நின்று போரிடுவது யார் ?

மர்ம மனிதன் வறுமை நாதன் !

கிருஷ்ணமூர்த்தி, கோபிப்பாளையம்.

பெருந்தன்மையும் கோழைத்தனமும் ஒன்றுதான் என்கிறார்கள் எங்களூர் காங்கிரஸ் தோழர்கள். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

எதிரியின் பண்டபலத்தையும் தன்னுடைய படைபலத்தையும் எடைபோட்டுப் பார்த்து அதில் எதிரியின் படைபலம் அதிகமாக இருந்து தன்னுடைய படைபலம் குறைவாக இருந்து அப்போது மௌனம் சாதித்தால் அது கோழைத்தனம். தன்னுடைய படைபலம் அதிகமாக இருந்து, எதிரியின் படை பலவீனமாகஇருந்து, அப்போதும் மௌனம் சாதித்தால் அது பெருந்தன்மை. உங்களுக்கு தெரிந்த உதாரணம் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள்.

மதுரையில் நடைபெற்ற இராமாயணக் கலவரத்தின் போது வைத்தியநாதய்யரின் கூலிபாட்கள் செய்த அட்டகாசங்களை திராவிடர் படை ஓர் நொடிப்பொழுதில் அடக்கி இருக்க முடியும். அப்போது உறைவாளை தடவிப் பார்க்காமல் அமைதி காத்தது திராவிடர் படை காட்டிய பெருந்தன்மை. சில ஆண்டுகளுக்கு முன்பு வைகை நதி மணற்பரப்பில் திராவிடர் கழக மாநாடு நடைபெற்றபோது யாருமறியாத வகையில் பந்தலுக்கு தீயிட்டது கோழைத்தனம். இதை வைத்து அந்த தேசீய தோழருக்கு பதில் கூறுங்கள்.

சாமி, சுந்தாபாண்டியம்.

மனிதன் நிலைமை தவறி பேசுவது எப்போது ?

கிண்டியிலே தான் நினைத்த குதிரை முன்னடி வந்தபோது !

மனிதனுக்கு மூளை தேவைப்படுவது எப்போது ?

ஆபத்து நேரிடும்போது !

துரைராஜ், ஆயிரம்விளக்கு, சென்னை.

நேருவுக்கு 'பாரதரத்னம்' பட்டம் கொடுத்திருக்கிறார்களே, ஏன் ?

'பாரத்' என்பதை ஒப்புக்கொள்ளாத தென்னாட்டை வாட்டி வதக்குவதற்காக !

ராமமூர்த்தி, சென்னை-14.

மனிதன் எப்போது சோம்பேறியாகிவிடுகிறான் ?

ஆள் அம்பு வசதி பெற்றபோது !

சண்முகம், திருப்பத்தூர்.

உலகம் முழுவதுமே அறிவாளிகளாயிருந்தால்...?

பயப்படவேண்டாம்! அந்த உலகத்தில் அநேகமாக சிவஞானம் இருக்கமாட்டார்.

சிவலிங்கம், சேலம்.

உங்கள் கண்கள் குருடாகி விட்டால் என்ன செய்வீர்கள் ?

பூனை உள்ளம் எனக்கில்லை, தோழரே !

ஆனந்தன், வத்ராயிருப்பு

பணத்தின் குணம் என்ன ?

திடீரென்று அன்பை வளர்க்கும் திடீரென்று அதைக் கொன்று விடும் !

கடுவாய்க்கத்தி, தென்காசி.

நடுப்பகலுக்கும் நடுநிசிக்கும் என்ன வித்தியாசம் காண்கிறீர்கள் ?

நடுப்பகலில் காதிலே விழக்கூடிய ஓசை ஒன்றைக் கேட்கிறேன். அது எங்கள் அலுவலகத்து அச்சு இயந்திரம். இரவிலேயும் ஒரு இயந்திரம் ஓசை எழுப்புவதாக எனக்கு நினைவு மட்டும் இருக்கிறது. ஆனால் அவ்வோசை என் காதிலே விழுவதில்லை. அது தான் நான் விடும் குறட்டை.

தவமணி, திண்டுக்கல்.

விதவையின் சிரிப்பு எதை எதைக் குறிக்கும் ?

குழந்தையை நோக்கிய சிரிப்பாக இருந்தால் அந்தச் சிரிப்பிலே தோல்வி கலந்திருக்கும். இளைஞனை நோக்கியதாக இருந்தால் நிச்சயமாக அது இன்ப மயக்கோடு இருக்கும்.

மீனாட்சி, மாயுமதுரை.

பெரியாரும் அண்ணாவும் தோன்றாது இருந்தால் தென்னாட்டின் நிலை எப்படி இருந்திருக்கும் ?

"அநியாய புத்திசாலி"கள் மலிந்திருப்பார்கள்.

நாகராசன், குகை.

தாளமுத்து, நடராசன் இறந்துவிட்டார்களாமே, உண்மையா ?

யார் சொன்னது ? பாவம் அவர் படிக்காதவராக இருந்தால் சென்ற வாரம், இந்த வாரம் தென்றல் இதழ்களில் வெளியாகியுள்ள வெண்பாப் போட்டியின் முடிவை வாசித்துக் காண்பியும். இல்லந்தோறும் தாளமுத்து, நடராசன்கள் இருப்பது புலப்படும்.

நீலகண்டன், தேவகோட்டை.

அழகும் அருவறுப்பும் ஒன்று சேர்ந்த இயற்கைப் படைப்பு எது ?

எங்கெங்கோ தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை. உம்மையும் ஒரு முறை பார்க்காமல் முடிவு சொல்ல முடியாது.

இந்திரா, கோவை.

காதலின் முடிவு சோகமாக மாறும்போது... ?

வைதீகப் பெற்றோர்கள் விழாக் கொண்டாடுவார்கள்.

ரங்கநாதன், விசாகப்பட்டினம்.

அரசியல் தலைவர்கள் நிலை தடுமாறுவது எப்போது ?

விசாகப்பட்டினத்திலே இருக்கிற நீர் பலரைப் பல உதாரணம் காட்டி பேச வேண்டியவர் தமிழ்நாட்டிலுள்ள என்னை கேட்டிருக்கிறீர். இருந்தாலும் சொல்லுகிறேன். ஆந்திர கேசரி பிரகாசத்திற்கு அரையணா லோக்கல் கார்டு போட்டுப் பாரும். சொந்த அனுபவத்தில் ஒரு கால்பகுதி சொன்னாலே போதும்.

தென்றலன், சுந்தாபாண்டியம்.

ஒருவன் தன் பெற்றோர் இன்னாரென்பதை நிரூபிக்க முடியாத காரணத்தால் பெற்றோர்களே இல்லையென்று சொல்ல முடியுமா ? அதே மாதிரியாக கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்க முடியாத காரணத்தால் கடவுள் இல்லையென்று கூறிவிட முடியுமா ?

தான் தன்னுடைய பெற்றோரை பார்க்க முடியாவிட்டாலும் தன்னுடைய நண்பர்களின் பெற்றோரை காண முடிகிறது. ஆனால் கடவுள் அப்படியல்லவே! கடவுள் ஒருவரைப் படைத்தார் என்பதற்கு நேரில் கண்டுகொள்ளும்படியான ஆதாரம் இல்லையே!

ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே தமிழகத்தில் இந்துமதம் நிலைத்திருந்தது. எனவே இந்து மதம் தமிழர் மதமே என்று பசும்பொன் தேவர் கூறினரே, இக் கூற்று சரியா ?

இந்து என்ற வார்த்தையே ஆரியர்கள் வந்தபிறகு ஏற்பட்ட வார்த்தை. ஆரியர்கள் வருகைக்கு பின்பே இந்துமதம் ஏற்பட்டது.

எடிசன், சென்னை-6.

துள்ளும் மீன்—ஆடும் மங்கை ! ஒற்றுமை வேற்றுமை என்ன ?

மீன் மரணவாசலில் துள்ளுகிறது. மங்கை சொர்க்கவாசலில் ஆடுகிறாள். ஆனால் அசைவும் நெளிவும் ஒன்றுதான் !

காமவேள், கதிர்காமம், இலங்கை

எல்லாம் இன்பமயமாக இருந்தால்...?

கதிர்காமத்தை நோக்கி பால்க் காவடி எடுக்கும் "புத்திசாலித் தனம்" மங்கிப்போகும் !

மேஸ்திரி, மட்டக்களப்பு, இலங்கை.

அண்ணா அமெரிக்கா சென்றால்... ?

வடநாட்டில் நான்கைந்து தற்கொலைகள் ஏற்படலாம். புதுடில்லி 'பேய்பிடித்த வீடா'கி விடலாம்.

ச. சே. அருள்மணி, கடபோக்காத்தி.

பிரபுவின் ஆனந்தம் அழுகையாக மாற என்ன செய்ய வேண்டும் ?

அவரது ஒரே மகள், ஒரு ஏழையைக் காதலிக்க வேண்டும்.

ஏஜண்டுகள் தேவை

அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.

ரூ. 15 முன்பணம் அனுப்பினால் ஆல்பம் வகையரா அனுப்பப்படும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு:—

நாதன்-கம்பெனி,
[காலண்டர் தயாரிப்பாளர்கள்]
திருச்சிராப்பள்ளி

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.